# சுவாமி விவேகானந்தரின்
# சிகாகோ பேருரை நூற்றாண்டு

## CENTENARY OF SWAMI VIVEKANANDA'S CHICAGO ADDRESS



**1893 -1993**

*CENTENARY CELEBRATIONS COMMITTEE TO COMMEMORATE SWAMI VIVEKANANDA'S ADDRESS AT THE WORLD'S PARLIAMENT OF RELIGIONS IN CHICAGO*
*BATTICALOA, SRI LANKA*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Souvenir**

to commemorate

# the Centenary Celebrations in Batticaloa

of

the address by

# SWAMI VIVEKANANDA

at

the World Parliament of Religions at Chicago

in September 1893

*CENTENARY CELEBRATIONS COMMITTEE TO COMMEMORATE SWAMI VIVEKANANDA'S ADDRESS AT THE WORLD'S PARLIAMENT OF RELIGIONS IN CHICAGO (1893 - 1993)*

*BATTICALOA*
*SRI LANKA.*

**15 OCTOBER 1995.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Members of the Centenary Celebrations Committee,

**Batticaloa - Sri Lanka.**

**23 July 1993.**

*PATRONS:*

Srimat Swami Atmaghananandaji Maharaj
Srimat Swami Jivananandaji Maharaj
Mr. R. Monagurusamy Govt. Agent, Batticaloa.

*PRESIDENT:*

Mr. C. Nadarajah Registrar, Eastern University, Sri Lanka.

*VICE PRESIDENT:*

Mr. S. Mamangarajah Dist. Director, World University Service, Canada.

*SECRETARY:*

Mr. K. Thedchanamoorthy Snr. Lecturer, Eastern University, Sri Lanka.

*ASST. SECRETARY:*

Mr. K. Nadarajah Community Development Officer.

*TREASURER:*

Mr. S. Ponnampalam Accountant.

*COMMITTEE MEMBERS:*

Mrs. S. Chakkarawarthy Asst. Director of Education.
Mr. S. Jeyaram Deputy Director of Planning.
Mr. S. Krishnapillai Vice Principal, Teachers T. C.
Dr. S. Maunaguru Head / Fine Arts, Eastern University, Sri Lanka.
Mr. A. K Pathmanathan Divisional Secretary, Batticaloa.
Mr. C. Punniyamoorthy Asst. Commissioner, Local Govt. & Municipal Commissioner.
Mr. T. Selvanayagam Retd. Principal.
Mrs. R. Sivapathasuntharam Retd. Principal.
Mrs. R. Thedchanamoorthy Principal, Swami Vipulananda College of Music & Dance.
Mr. S. Theivanayagam Deputy Director of Education.
Mr. R. Thiyagalingam Deputy Post Master General.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிகாகோ அனைத்துலகச் சமயப் பெருமன்றத்தில்
( 1893 செப்டம்பர் )

# சுவாமி விவேகானந்தர்

ஆற்றிய

## பேருரையின் நூற்றாண்டு ஞாபகார்த்த மலர்

சுவாமி விவேகானந்தர் சிகாகோ அனைத்துலகச் சமயப்
பெருமன்றப் பேருரை நூற்றாண்டு விழாச் சபை, மட்டக்களப்பு.
இலங்கை.

**15** ஒக்டோபர் **1995.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SRI RAMAKRISHNA MATH

**16, Ramakrishna Math Road, Mylapore, Madras-600 004.**

**P. B. No.** 635, **Phone:** 494 1231, 494 1959

Fax: 4934589


**September 18, 1995.**

## *MESSAGE*

I am glad to learn that the Swami Vivekananda Chicago Centenary Celebration Committee of Batticaloa, Sri Lanka, will be bringing out a Souvenir shortly. I am sure this souvenir will enlighten the citizens of Sri Lanka about the significance and practical application of the message of Swami Vivekananda addressed to the whole of humanity. On this occasion I wish the souvenir success and pray to Sri Ramakrishna, Holy Mother and Swamiji to shower their Choicest blessings on all of us.

**Swami Gautamananda**
President.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு மண்ணில்

## ஓர் ராமகிருஷ்ண, விவேகானந்த பாரம்பரியம்



முத்தமிழ் வித்தகர்
ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தர்



ஸ்ரீமத் சுவாமி நடராஜானந்தர்



ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தர்



ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சுவாமி விவேகானந்தர் சிகாகோ சர்வ மத மகா சபையில் இந்து மதத்தை உலகளாவிய ஓர் மதமாக எடுத்துரைத்து பாரதத்துக்குப் பெருமை தேடிக்கொடுத்தார். அந்த ஞானப் பேருரைகளின் நூற்றாண்டு விழா இந்துப் பெருமக்கள் வாழும் தேச மெங்கணும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படும் இவ்வேளையில் எமது மண்ணிலும் அன்னாரது பெருமை போற்றப்படுவது சாலப் பொருத்தமே.

சிகாகோ சொற்பொழிவின் பின்னர் தாய்நாடு திரும்பும் வழியில் இலங்கை மண்ணையும் தரிசித்த சுவாமிகள் கொழும்பை மையமாகக் கொண்டு கண்டி, யாழ்ப்பாணம், அனுராதபுரம் ஆகிய பிரதேசங்களுக்கு விஜயம் செய்தனர். ஆனால் கிழக்குக்கு விஜயம் செய்ய அவர்களால் முடியவில்லை. இருந்தபோதும் தாம் தரிசித்த இடங்களைவிட தரிசிக்காத கிழக்கு மண்ணையும் அதன் மக்களையும் பெரிதாக நேசித்து மானசீகமாக ஆசீர்வதித்துள்ளனர் போலும்! ஸ்ரீ ராமகிருஷ்ண விவேகானந்த வழியில் இலங்கையின் எப்பாகமும் கண்டிராத எழுச்சியையும் தீவிர வளர்ச்சியையும் கடந்த காலங்களில் எமது பிரதேசங்களில் காணமுடிந்தது. இங்குள்ள மக்கள் ஸ்ரீ ராமகிருஷ்ண சம்பிரதாயத்தை முற்று முழுதாக ஏற்றுக்கொள்ளக்கூடிய பக்குவத்தைப் பெற்றிருந்ததே இதற்குக் காரணமாகும்.

சம்பவங்கள் பலவற்றை ஜீரணித்துக்கொள்ள முடியாது சஞ்சலப்படும் மனதைவிட வெறுமனே உள்ள மனதில் புதுக்கருத்துக்களைப் புகுத்துவது எளிது. எமது பிரதேச மக்கள் வெவ்வேறு கருத்துக்களுக்கு ஆட்பட்டு சலனமுற்றிருக்கவில்லை அவர்கள் தெளிவுடன் இருந்தனர். இந்நிலையில் சுவாமிகளின் எண்ணக்கருக்கள் இலகுவில் அவர்களை ஆட்கொள்ளக்கூடியனவாக இருந்தன.

மேலும், எமது பிரதேசத்தில் சுவாமிகளின் எண்ணங்கள் பிரதிபலிப்பதற்கு மூல காரணமாயமைந்தவற்றுள் ஸ்ரீமத் சுவாமி சர்வானந்த மகராஜ் - பண்டித மயில்வாகனர் சந்திப்பு, மஹா புருஷ்ஜீ மகராஜ் சுவாமி சிவானந்தர் பண்டித மயில்வாகனரை ஆட்கொண்டமை, கிழக்கில் ஓர் இராமகிருஷ்ண சங்கத் துறவியாக சுவாமி விபுலானந்தர் தோற்றம், அதையொட்டி ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தேவரின் நேரடிச் சீடர் ஸ்ரீமத் சுவாமி விஞ்ஞானானந்தஜீ மகராஜ் அவர்களின் வருகை, சிவானந்த வித்தியாலயத்தின் தோற்றம், ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் குருகுலத்தின் எழுச்சி போன்றவற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக உருவாக்கம் பெற்ற ஒவ்வொரு அம்சமும் ஒவ்வொரு படிக்கல்லாக அமைந்து இன்று ஸ்ரீ ராமகிருஷ்ண - விவேகானந்த சம்பிரதாயம் பரிமளிக்கும் ஓர் பிரதேசமாக கிழக்கிலங்கை மிளிர்வதற்கு வழிகோலியுள்ளன என்றால் மிகையாகாது. இவ்வாறு ஸ்ரீ ராமகிருஷ்ண சம்பிரதாயம் தோன்றி வளர்ச்சி கண்ட ஒவ்வோர் சம்பவத்திற்கும் வித்திட்டது சுவாமி விவேகானந்தரின் எண்ண அலைகளும் ஆசீர்வாதங்களுமே என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

சுவாமி விவேகானந்தரின் எண்ண அலைகள் வீசிக்கொண்டிருக்கும் இப்பிரதேசமும் இதன் மக்களும் சுவாமிகளின் பெருமையைப் போற்றும் வகையில் விழா எடுப்பதும் மலர் வெளியிடுவதும் வியப்புக்குரியதல்ல. சுவாமி விவேகானந்தரின் சிகாகோ நூற்றாண்டு விழாச் சிறப்பு மலராக வெளிவரும், இவ்விதழ் தாங்கிவரும் ஒவ்வோர் அம்சமும் பெறுமதி வாய்ந்தது. இந்துப் பெருமக்களும் ஸ்ரீ ராமகிருஷ்ண மரபு பேணும் ஒவ்வோர் அன்பரும் இவற்றைப் படித்துப் பயன்பெற வேண்டுமெனும் வேண்டுகோளை எமது சார்பாக விடுத்து இப்பணியில் முன்னிற்கும் மட்டக்களப்பு சிகாகோ பேருரை நூற்றாண்டு விழாச் சபை உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் பேரருள் சகலவகையிலும் பெருகவேண்டுமெனப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் (இலங்கைக் கிளை)
இராமகிருஷ்ணபுரம்,
மட்டக்களப்பு.

**சுவாமி ஜீவனானந்த**
காப்பாளர்,
சுவாமி விவேகானந்தர் சிகாகோ
அனைத்துலகச் சமயப் பெருமன்றப் பேருரை
நூற்றாண்டு விழாச்சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA YOGODYAN MATH**
*7, Yogodyan Lane, Kankurgachhi*
*CALCUTTA - 700 054, INDIA.*

August 26, 1994.

I am glad to know that the Ramakrishna Mission, Batticaloa, Sri Lanka, will bring out a Souvenir on the Centenary Celebrations of Swami Vivekananda's Addresses in the World's Parliament of Religions.

The message of Sri Ramakrishna - Vivekananda is the message of universal brotherhood, of tolerance and acceptance, of service and 'SADHANA'. Whoever endeavours to translate their message in his own life and helps others imbibing the same, is serving the cause of the Lord for his own benefit and for the benefit of all. First we have to inculcate the attitude of brotherhood and tolerance amongst our fellow men and then try to disseminate the same through our practices — 'Be and Make', as Swami Vivekananda put it.

I pray to Sri Ramakrishna for the success of this welfare - endeavour of the Ramakrishna Mission, Batticaloa.

**Swami Gahanananda**
*Vice - President,*
*Ramakrishna Math & Ramakrishna Mission.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE

I am happy to know that all of you have founded a Vivekananda Chicago Centenary's committee to celebrate it in Batticaloa in September 1994.

India and Sri Lanka need Swami Vivekananda's purifying, unifying, and strengthening message of practical Vedanta to overcome our present challenges. His whole message he sums up in the two expressions, namely, man-making and nation-building. The more people in Sri Lanka read Vivekananda literature the more capable they will become to face their national problems.

I remember that, in 1947, during my extensive lecture tour of Sri Lanka, I happened to be in the Jaffna college to address a vast audience who had assembled there to celebrate the 50th anniversary of Swami Vivekananda's speech at the Jaffna college. And after the lecture, one of the audience came towards me with great excitement and said that he had attended also Vivekananda's lecture in the same college in 1897.

I convey my best wishes for the succes of the celebration and the souvenir.

**Swami Ranganathananda**
Vice - President
Ramakrishna Math and Ramakrishna Mission.

August 20, 1994
Ramakrishna Math
Hyderabad 500029
INDIA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road,
Wellawatta,
COLOMBO - 06.
19 - 8 - 94.

# MESSAGE

*The Centenary celebration of Swami Vivekananda's Address at the World Parliament of Religions has come to an end, with processions, speeches, competitions for children etc., held at various places throughout the country, from September 93 to September 94.*

*Now, is it all what the Centenary celebration was intended for?*

*No, the intention was something more than all these activities. It was to bring together in love and fraternity, people of different religions, sects and languages, without destroying their individuality in anyway. To put it in the words of Swami Vivekananda himself, as he declared at the Parliament of Religions, "The Christian is not to become a Hindu or a Buddhist, nor a Hindu or a Buddhist to become a Christian. But each must assimilate the spirit of the other and yet preserve his individuality and grow according to his own law of growth." He was very much against religious fanaticism and bigotry, which have contributed to horrible violence and destruction of human civilization. Ending his speech at the Parliament he said, "I fervantly hope that the bell that tolled this morning in honour of this convention may be the death-knell of all fanaticism, of all persecutions with the sword or with the pen, and of all uncharitable feelings between persons wending their way to the same goal.*

*Let us hope and pray that this Centenary celebration would breathe into this world the spirit of harmony and peace, for which purpose the great Swami Vivekananda was born.*

*My hearty congratulations and best wishes to all the members of the Swami Vivekananda Centenary Committee of Batticaloa, for their sincere efforts to make this celebration a great success. May the Almighty bless them all!*

**Swami Atmaghanananda**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

இந்தியாவின் தலைசிறந்த ஆத்மீகத் தலைவர்களுள் ஒருவரான சுவாமி விவேகானந்தரின் உலகப் புகழ்பெற்ற சிக்காக்கோ சொற்பொழிவின் நூற்றாண்டு நிறைவையொட்டி சிறப்பு மலர் வெளியிடுவது அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

சுவாமி விவேகானந்தரின் சமயச் சிந்தனைகள் நூற்றாண்டைக் கடந்தும் இன்றைய உலகுக்குப் பொருத்தமானதாக, தேவையானதாக இருப்பது அவர் ஒரு மாபெரும் ஞானி என்பதை உறுதிப்படுத்துகிறது. சமயப்பிளவுகளும், சண்டைகளும் மிகுந்திருந்த ஒரு காலகட்டத்தில் அனைத்துச் சமய மக்களையும் அவர் சகோதரர்களாகக் கண்டார். உண்மையின் வடிவான ஒரே இறைவனைத் தேடும் மதங்கள் ஒன்றை ஒன்று மதிப்பதும் போற்றுவதும் அவசியமென்று கருதினார். சமயங்கடந்த அவரது மனித நேயமே அவரை உலகம் போற்றும் மாபெரும் ஞானியாக இனங்காட்டியது.

கிறிஸ்துவின்பால் சுவாமி விவேகானந்தருக்கு இருந்த ஈடுபாட்டை நாம் இந்தவேளையில் நினைவு கூருகின்றோம். அவர் தாம் எழுதிய 'ஞானதீபம்' என்னும் தொகுப்பிலே பல இடங்களில் இயேசுக்கிறிஸ்துவில் தமக்கிருந்த அன்பையும், பக்தியையும், விசுவாசத்தையும் மிகத்தெளிவாகக் கூறியிருப்பது அவரது பரந்த சமய நோக்கை வெளிப்படுத்தப் போதுமானது. இயேசுவைப்பற்றி அவர் கூறுகையில் ''இயேசுக்கிறிஸ்துவை, மனித உருக் கொண்ட தெய்வத்தை நாம் தெய்வமாக வணங்கவேண்டும். உங்களுக்கு வீடுபேறு வேண்டுமானால் கிறிஸ்துவுடன் நெருங்கிய தொடர்பைக் கொள்ளுங்கள் (ஞானதீபம் - சுடர் 7 பக். 270) கிறிஸ்தவ விசுவாசத்தை வடித்துக் கூறுவதுபோல் அமைந்துள்ள இந்த வார்த்தைகள் சுவாமி விவேகானந்தர் இந்து சமயத்துக்கு மட்டுமல்ல கிறிஸ்தவத்துக்கும் எவ்வளவு நெருக்கமானவர் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

அனைத்துச் சமயங்களிலும் உண்மையைக்கண்டு, அதைப்போற்றி, ஆன்மீக வளர்ச்சிக்கும், மானுட மேம்பாட்டுக்கும், அனைத்துலக ஒற்றுமைக்கும் வழிகாட்டிய சுவாமி விவேகானந்தர் உலகமக்கள் அனைவராலும் மதிக்கப்படவும், போற்றப்படவும், நேசிக்கப்படவும் வேண்டியவர். அவரது பெயரால் வெளியிடப்படும் இச்சிறப்பு மலர் அழகுற அமைய வாழ்த்துவதோடு நமது ஆசீரையும் வழங்குகிறோம்.

**பேரருள் தந்தை**
**கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை**
ஆயர், திருகோணமலை-மட்டக்களப்பு
மறை மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்ஹாஜ் மௌலவி எம்.எச்.எம். புஹாரி (பலாஹீ)

அவர்களது

# ஆசிச் செய்தி

சுவாமி விவேகானந்தர் அவர்களது சிகாகோ சமயப் பேருரை வரலாற்றுச் சிறப்புமிக்கது. சாதாரண நிலையிலிருந்த விவேகானந்தரை உலகம் போற்றும் உத்தமராய் உயர்த்தி வைத்தது அந்தப் பேருரை. அப்பேருரை நிகழ்த்தப்பெற்று நூறு ஆண்டுகள் நிறைவுறுவதை நினைவு கூருமுகமாக விழாக்கள் நடத்தப்படுவதும், சிறப்பு மலர் வெளியிடப் படுவதும் இன்றைய காலகட்டத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகும்.

உலக போகத்தில் மூழ்கி, உணர்விழந்து ஒளியிழந்து தவிக்கும் உள்ளங்களை நன்னெறிப்படுத்துவன உபதேசங்கள்; சமயப்பேருரைகள். எனவேதான் எல்லாச் சமயத் தலைவர்களும் அடிக்கடி மக்களுக்குப் போதனைகள் வழங்கிக்கொண்டிருக்கின்றனர்.

அமைதியிழந்து அல்லோலகல்லோலப்படும் உலகுக்கு - உலக மாந் தருக்கு சமயங்களின் வழிகாட்டுதல் மிகமிகத் தேவை. மக்கள் மனங் களில் சாந்தி நிறைய சமயப்பேருரைகள் அவசியம்.

சுவாமி விவேகானந்தரது சிகாகோ சமயப்பேருரை தொடர்பான நூற்றாண்டு விழாக்கள் மூலம் உலக மக்களுக்கு உயர்ந்த போதனை களும், உயர்நெறிப் பண்புகளும் கிடைக்கவேண்டும் என்று விரும்பு கின்றேன்.

இம்மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவது குறித்து மகிழ்ச்சியடை கின்றேன்.

சாந்தியும் சமாதானமும்
எங்கும் நிலவுக!
என்றும் நிலவுக!

காத்தான்குடி
18-04-1995.

அல்ஹாஜ் மௌலவி
எம். எச். எம். புஹாரி (பலாஹீ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் அறிக்கை

— வாழ்வின் வழிகாட்டும் ஒளி —

சுவாமி விவேகானந்தர் இந்துத் துறவியருள் முதன்மையானவர். இந்து சமயம் பிரபஞ்சம் தழுவியது. எல்லாச்சமயக் கருத்துக்களையும் தன்னகத்தே கொண்டது. எல்லாச் சமயங்களும் ஓர் உண்மையையே போதிக்கின்றன. ஆனால் அந்த உண்மையை அணுகுகின்ற முறையில் வேறுபாடுகளுண்டு. இவ் வேறுபாடுகள் யாவும் ஒவ்வொரு சமயத்தையும் சார்ந்த தாபகர்களினாலும் அவர்களையடியொற்றிவந்த சீடர் பரம்பரைகளினாலும் ஏற்பட்டதாகும். சிலர் இறைவனை ஒரே பரம்பொருளாக கருதும்போது இன்னும் சிலர் இறைவனை பல்வேறு நாம ரூபங்களாகக் கருதுகிறார்கள். இந்து சமயத்தின் பல்வேறு பிரிவுகள்கூட இறைவனைப் பல்வேறு நாம ரூபங்களுடன் வழிபடுகின்றன. உண்மையில் பார்க்கப்போனால் பல்வேறு நாம ரூபங்களுடன் வழிபடும் இந்துக்கள்தான் ஈற்றில் பல்வேறு ரூபங்களின்மூலம் ஒரே இறைவனை விளங்கிக்கொள்பவர்களாகவும் இருக்கிறார்கள். இதன் அடிப்படையில் இந்து சமயமானது சமயங்களனைத்தும் ஒன்றுகூடிய ஓர் பேரவையாக அமைகின்றது. பல்வேறு சமயக் கோட்பாடுகளையும் அது தன்னகத்தே கொண்டதாக விளங்குகின்றது. பல்வேறு சமயங்களும் சர்வ வல்லமை கொண்ட அந்தப் பரம்பொருளை அடைகின்ற வழிகளையே காட்டி நிற்கின்றன என்பது உறுதி. பிரபஞ்சம் முழுவதற்குமான அந்தப் பரம்பொருள் ஒன்றேயொன்றுதான். அதனைப்பல நாம ரூபங்களாக நாம் கருதலாம். இந்த வேறுபட்ட நாம ரூபங்களைப் பக்தர்கள்தான் ஏற்படுத்திக்கொள்கின்றனர். இறைவனைத் தந்தையாக வணங்கும்போது அவர் தந்தையாகவும் தாயாக வணங்கும்போது அவர் தாயாகவும் பக்தர்கட்கு காட்சி தருகின்றார். இவ்வாறே இறைவனை இயேசு கிறிஸ்துவாக வழிபடும் பக்தர்களுக்கு அவர் இயேசு கிறிஸ்துவாகவும், சிவனாக வழிபடும் பக்தர்களுக்கு அவர் சிவனாகவும் இன்னும் பல்வேறு ரூபங்களில் வழிபடும் பக்தர்களுக்கு அவர் பல்வேறு ரூபங்களிலும் காட்சி தருகிறார். இறைவனைப் பல்வேறு நாம ரூபங்களுள் மட்டும் உள்ளடக்குவது அறிவுடைமையாகாது. இறைவனைப் பிரபஞ்சத்தின் ஒரேயொரு உண்மைப்பொருளாக ஏற்றுக்கொள்வதுதான் உண்மை ஞானமாகும். இக்கருத்தினை உலகிற்கு முதன் முறையாக 1893 ம் ஆண்டு சிகா கோவில் ஒன்றுகூடிய சர்வசமயப் பேரவையில் எடுத்தியம்பியவர் இந்திய இந்துத் துறவி சுவாமி விவேகானந்தர் ஆவார். சிகா கோவில் நடந்தேறிய முதலாவது சர்வ சமயப் பேரவை நடந்து ஒரு நூற்றாண்டுக்குப் பின்னரும் சுவாமி விவேகானந்தரை நாம் நினைவு கூர்வது அவர் ஒரு தலைசிறந்த இந்துத்துறவி என்பதற்காகவல்ல. உலகின் சமயங்கள் அனைத்தும் காட்டும் வழிகளெல்லாம் ஈற்றில் ஒரே இறைவனை - சர்வ வல்லமைகளும் கொண்ட அந்தப் பரம்பொருளை அடைகின்ற வழிகளே என்ற உண்மையை எடுத்துக்கூறியமைக்காகவாகும்.

கிழக்கிலங்கை, மட்டுமாநகரில் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் பெரும் பணியாற்றி வருகிறது. அதனுடன் இணைந்து சுவாமி விவேகானந்தரின் புகழ்பெற்ற சிகாகோ பிரசங்கத்தின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதில் நாம் மட்டில்லா மகிழ்ச்சியடைகிறோம் இந்தப் பிரசங்கத்திலல்லவா சமயம் என்றாலென்ன என்பதையும் உலகின் எல்லாச் சமயங்களின் கோட்பாடுகளையும் எவ்வாறு இந்து சமயம் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது என்ற உண்மையையும் விவேகானந்தர் உலகம் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் எடுத்துரைத்தார் சுவாமி விவேகானந்தர் ஓர் சமயவாதியல்ல. சமயங்களில்காணப்படும் உயர்ந்த கோட்பாடுகளை உலகிற்கு எடுத்துக்கூறும் ஓர் சமய சம தர்மவாதியாக அவர் விளங்கினார். ஓர் இந்து சிறந்த இந்துவாகவும், ஓர் கிறிஸ்தவர் சிறந்த கிறிஸ்தவனாகவும், ஓர் இஸ்லாமியன் சிறந்த இஸ்லாமியனாகவும் வாழவேண்டுமென்பதே அவர் போதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக இருந்தது. தத்தமது சமயக்கோட்பாடு களைத் தெளிவாக அறிந்து ஒழுகாத அரை குறை ஞானமுள்ள சமயவாதிகளே தமது சமயமே மற்றெல்லாச் சமயங்களையும் விட உயர்வானது என்று முரண்படுகின்றார்கள்; சமயச் சச்சரவுகளை ஏற்படுத்துகிறார்கள். உலகின் மனிதகுலத்தைச் சேர்ந்த யாவரும் சகோதர சகோதரிகளாக வாழும்நிலை வேண் டும். இதுவே விவேகானந்தரின் செய்தியாகும் இதுவே சமயங்களின் செய்தியுமாகும். இந்தச் செய்தியின் மெய்ப்பொருளை நாம் விளங்கிக் கொள்வோமாயின் விவேகானந்தரின் போத னைகளை ஏற்றுக்கொண்டவர்களாவோம்.

சுவாமி விவேகானந்தரின் போதனைகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளும்போது மட் டுமே அவரின் சிகாகோ பிரசங்கத்தின் நூற் றாண்டு விழாவை நாம் கொண்டாடுவது அர்த்தம் நிறைந்ததாகின்றது. சுவாமி விவே கானந்தரின் சிகாகோ பிரசங்கம் இறைவனை ஒரே தந்தையாகவும், அவரின் குழந்தைகள் யாவரையும் சகோதர சகோதரிகளாகவும் சமரச நோக்கில் புலப்படுத்துகின்ற கலங்கரை விளக்காக நம் வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளி யாக விளங்குகின்றது.

எமது விழாச் சபையின் செயற்றிட் டங்கள் தொடர்பான விரிவான அறிக்கை இம்மலரின் பிறிதோரிடத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது.

இந்த நூற்றாண்டு விழாவின் குறிக் கோள் நிறைவேறும் வண்ணம் கடுமையாக உழைத்த எமது குழு அங்கத்தினருக்கும் எம்மை அன்புடன் வழிநடத்திய ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷன் சுவாமிஜீ அனைவருக்கும் இவ்விழாக் குழுவின் தலைவர் என்ற கோதா வில் என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

யுக புருஷனாம் சுவாமி விவேகானந்தர் எமது வாழ்வின் கலங்கரை விளக்காக வழி நடத்தப் பிரார்த்திப்போமாக.

**சி. நடராஜா**

தலைவர், சுவாமி விவேகானந்தர்
சிகாகோ அனைத்துலகச் சமயப்
பெருமன்றப் பேருரை
நூற்றாண்டு விழாச் சபை,
மட்டக்களப்பு.

நீ பட்டினி கிடந்தாயினும் உன்னிடமுள்ள கடைசிப் பருக்கையையும் தான மளித்து விடு. தர்மம் செய்வதால் மரணம் நேரிடினும் அது சாதாரணமான மரண மாகாது மோட்சமேயாகும். அப்படிக் கிட்டும் முடிவினால் நீ பூரணப் பொருளா வாய், தெய்வமாவாய்.

—★— —★— —★—

ஏழைகளும், அபாக்கியசாலிகளும் இருப்பது நம் முக்திக்காகவே. அவர்களின் உருவத்திலும் இன்னும் பித்தனாகவும், பிணிவாய்ப்பட்டவனாகவும், பாவியாகவும் இருக்கும் பகவானுக்கு நாம் பணிசெய்து முக்தி பெறவேதான் இவர்கள் யாவரும் இருக்கிறார்கள்.

— ஸ்வாமி விவேகானந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளர் அறிக்கை

1893ம் ஆண்டு சிகாகோ நகரில் நடைபெற்ற அனைத்துலகச் சமயப் பெருமன்றத்தில் சுவாமி விவேகானந்தர் நிகழ்த்திய சொற்பொழிவு சரித்திர முக்கியத்துவம் பெற்ற ஒன்றாகும். கிழக்கு மேற்கு உலகங்களிலிருந்து தேர்ந்தெடுத்த ஆன்மீகப் பேரறிஞர்கள் கலந்துகொண்ட முதலாவது பொது மேடையாக அச்சபை விளங்கியது. சமய சமரசம் ஊற்றெடுக்கும் மேடையாக அது அமைந்தது எனலாம். அப்பேரவையின் உயரிய நோக்கம் சுவாமி விவேகானந்தரின் கருத்தாழம் மிக்கதும் உள்ளத்தை கவர்வதுமான பேச்சினால் பூரணத்துவம் பெற்றதென அங்கு குழுமியிருந்த அறிஞர்கள் புகழாரம் சூட்டினார்கள். அவரின் உரையினால் சமயங்களனைத்தும் உயர்ந்த கோட்பாடுகளைக் கொண்டவை என்ற கருத்தும், ஒன்றைவிட இன்னொரு சமயம் உயர்ந்ததோ தாழ்ந்ததோ அல்ல என்னும் கருத்தும் முழுமையாக அச்சபையில் நிறுவப்பட்டது. சுவாமிஜீ இச்சபையில் ஆற்றிய உரையின்மூலம் பாரதத்தின் ஆன்மீகச் செல்வத்தின் சிறப்பையும் அதன் பாரம்பரிய பண்புகளையும் மேற்குலகம் புதிய தெளிவுடன் அறிந்துகொண்டது. இப்பேரவையின் தாக்கம் பாரதத்திலும் எதிரொலித்தது. பாரத மக்கள் தம் நாட்டின் ஈடிணையற்ற ஆன்மீகச் சிறப்பை புதிய கண்ணோட்டத்துடனும் புத்துணர்வுடனும் காணத்தலைப்பட்டார்கள். பாரதத்தின் ஆன்மீக செல்வத்தை மேற்குலகும், மேற்குலகின் விஞ்ஞான அறிவை கீழைத்தேசங்களும் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று சுவாமிஜீ வேண்டுகோள் விடுத்தார். அதன் விளைவாக பாரதத்தின் ஆன்மீக அலைகள் மேற்குலகினையும் இன்று சென்றடைய வழி பிறந்தது. சுவாமி விவேகானந்தரின் சிகாகோ பேருரையின் நூற்றாண்டு நினைவாக சென்ற 1993/94ம் ஆண்டுகளில் உலகில் பலபாகங்களிலும் நூற்றாண்டு விழாக்கள் சிறப்பாக நடந்தேறின.

சுவாமி விவேகானந்தரின் விழுமிய சிந்தனைகளை உலகெங்கும் எடுத்துச்செல்வதும், மனிதனிடையே ஆன்மீக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதும், சமய சமரசத்தை வலியுறுத்துவதும், சமூக தொண்டுகள் புரிவதுமாக இவ்விழாக்களின் நோக்கங்கள் அமைந்திருந்தன. இலங்கையில் ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கமும், பல ஸ்தாபனங்களும் தனித்தும் ஒன்றிணைந்தும் இவ்விழா தொடர்பான பல செயற்பாடுகளை மேற்கொண்டன. மட்டக்களப்பில் இப்பணியினை மேற்கொள்ளும் பொருட்டு இராமகிருஷ்ண மிஷன் கொழும்பு தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகணானந்தாஜீ மகராஜ் அவர்களினதும் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தாஜீ மகராஜ் அவர்களினதும் ஆசியுடன் விழாச்சபையொன்று 1993 ஜனவரி 23ம் திகதி நிறுவப்பட்டது. பாடசாலை மாணவர்களுக்கும் வளர்ந்தவர்களுக்குமான கட்டுரை, கவிதை, பேச்சு, சித்திரப்போட்டிகளை நடத்துதல், பிரசாரக் கூட்டங்கள் நடத்துதல், பின்தங்கிய கிராமமொன்றில் மாதிரி கிராமமொன்றை அமைத்து அதில் வீடற்றவர்களுக்கு வீட்டுவசதி, வீதி அமைப்பு, பாடசாலை, பொது மண்டபங்கள் என்பன நிறுவுதல் கருத்தரங்குகளையும் கண்காட்சிகளையும் விளையாட்டுப் போட்டிகளையும் நடத்துதல் என்பனவற்றை இலக்காகக் கொண்டு இச்சபை தனது பணிகளை ஆரம்பித்தது. இப்பணிகளனைத்தையும் எம்மால் வெற்றிகரமாகச் செய்ய முடியாமற்போனது கவலைக்குரிய விடயமே. என்றாலும் ஆக்கபூர்வமான பணிகள் சில நடந்தேறின என்பதில் திருப்தியடைகிறோம். செய்து முடித்த அப்பணிகளை பின்வருமாறு நிரல்படுத்திக் கூறலாம்.

எமது முதலாவது பொது நிகழ்ச்சி 1993 ஜுன் 06ம் நாள் நிகழ்ந்தேறியது. இவ்விழாவில் "சுவாமி விவேகானந்தரும் சிகாகோ பிரசங்கமும்" என்னும் தலைப்பில் கட்டுரையொன்றின் ஆயிரம் பிரதிகள் பிரசுரித்து விநியோகிக்கப்பட்டன. இதே ஆண்டு செப்டெம்பர் மாதம் 11ம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் காலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்தனையில் சுவாமிஜீயின் சிகாகோ பிரசங்கத்தை நினைவுகூர்ந்து பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் உரை நிகழ்த்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

விழாவின் இரண்டாவது பொது நிகழ்ச்சி 1993 செப்டெம்பர் 11ம் நாளும் மூன்றாவது பொது நிகழ்ச்சி 1993 டிசம்பர் 02ம் நாளும் சிறப்பாக நடந்தேறின. மூன்றாவது நிகழ்ச்சி கல்கத்தா ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் உதவிச் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி பிரபானந்தஜீ மஹராஜ் அவர்களின் இலங்கை விஜயத்தை யொட்டி சிறப்பாக நடத்தப்பட்டது. இவ் விழா ஓர் சர்வமத மகா சபைபோல் விளங்கியது. இதில் திருகோணமலை, மட்டுநகர் பேராயர் வணக்கத்திற்குரிய கிங்ஸ்லி சுவாம் பிள்ளை அவர்களும், மட்டக்களப்பு மங்கள ராமய பிரதம குரு வணக்கத்திற்குரிய ஞானானந்த தேரர் அவர்களும், மட்டக்களப்பு மெதடிஸ்த சபை பிரதம போதகர் வணக்கத்திற்குரிய ஆனந்தராஜா அவர்களும், காத்தான்குடி பள்ளிவாசல் சம்மேளனத் தலைவர் மௌலவி புஹாரி அவர்களும் சிறப்புரை வழங்கி விழாவைச் சிறப்பித்தார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தை உள்ளடக்கியதான கொடிவாரம் 21-03-94 தொடக்கம் ஐந்து நாட்களுக்கு நடத்தப்பட்டது. பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் அரச திணைக்கள அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் ஆர்வத்துடன் பங்குபற்றி நிதியுதவி வழங்கினார்கள்.

கல்கத்தா ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் உப தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மஸ்தானந்தாஜீ மஹராஜ் அவர்களின் இலங்கை வருகையை யொட்டி வரவேற்புபசாரக் கூட்டமொன்று 28-05-94இல் சிறப்பாக நிகழ்ந்தேறியது. கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் பாடசாலைகள் மத்தியில் பேச்சு, கட்டுரைப்போட்டிகள் மேற்பிரிவு, மத்திய பிரிவு, கீழ்ப்பிரிவு ஆகிய மட்டங்களில் சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பின்தங்கிய கிராமமொன்றைத் தெரிவுசெய்து அதனை ஒரு மாதிரிக் கிராமமாக அமைக்கவேண்டுமென்று தீர்மானித்திருந்தோம். அதன் பிரகாரம் மட்டக்களப்பு நகரை அண்மித்துள்ள மட்டிக்களி என்னும் கிராமத்தில் வீடற்றோருக்கு 60 வீடுகள் கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக வீடமைப்பு அமைச்சு வீடொன்றிற்கு ரூபா 20,000/- வீதம் 60 வீடுகளுக்குத் தேவையான நிதியை வீடமைப்பு அதிகார சபைக்கு வழங்கியிருந்தது. காணி ஒதுக்கீடு மற்றும் எதிர்பாராத நடைமுறை சிக்கல்களினால் 30 வீடுகளுக்கான நிர்மாண வேலைகளே ஆரம்பிக்கப்பட்டன. இவற்றில் சில பூரணமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஏனையவை இன்னும் பூர்த்திசெய்ய வேண்டிய நிலையிலுள்ளன.

விழாச்சபையின் தூண்டுதலினால் இக் கிராமத்தில் ரூபா 75,000/- பெறுமதியான வாசகசாலையொன்று அரசினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இது சுவாமி விவேகானந்த வாசகசாலை என்ற பெயரில் இயங்கிவருகின்றது. மேலும் இதேபோன்று இவ்வாசக சாலையை அண்மித்து ரூபா 75,000/- பெறுமதியான மீனவர் தங்கும் மண்டபமொன்றும் அரச நிதியினால் நிறுவப்பட்டுள்ளது.

எமது பணிகள் சிறப்பாக நடந்தேற எமது சபை அங்கத்தினர்கள் அனைவரும் அரும்பணியாற்றியுள்ளார்கள். அவர்களனைவருக்கும் நன்றி கூறுவது எனது கடமையாகும். சபை அங்கத்தினர்களிற் பெரும்பான்மையானோர் பொறுப்பான பதவிகளை வகிப்பவர்கள் அவர்களது பொறுப்பான அலுவல்களின் மத்தியிலும் எமது சபையின் பணிகள் சிறப்பாக நடந்தேற தங்களது பங்களிப்பை முழுமையாக வழங்கினார்கள். இதற்காக நாம் அவர்களுக்கு நன்றி கூறுகின்றோம்.

எமது சபை உறுப்பினர்களாகப் பல அன்பர்கள் சந்தா செலுத்தி, வேண்டியபோது அறிவுரைகள் வழங்கி எம்மை ஊக்கப்படுத்தினார்கள். அவர்களுக்கும் எமது நன்றியுரித்தாகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை மத்தியிலான போட்டிகள் நடத்தவும், விழாக்கள் சிறப்பாக நடந்தேற வும் கல்வித் திணைக்களமும், அதிபர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் எமக்கு மிகவும் ஒத்தாசை புரிந்தார்கள். அவர்களுக்கும் நன்றி கூற நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். மட்டிக்களிக் கிராமத்தில் வீடுகளை நிர்மா ணிப்பதற்கு வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் திரு. K. பத்ம நாதன் அவர்களும், மீனவர் தங்கு மண்டப மும், வாசகசாலையும் அமைவதற்கு முன் னாள் மாநகர ஆணையாளர் திரு. செ. புண் ணியமூர்த்தி அவர்களும், முன்னாள் மண் முனை வடக்கு பிரதேசச் செயலாளர் திரு. அ. கி. பத்மநாதன் அவர்களும் தமது பங் களிப்பை மிகச்சிறப்பாக வழங்கியிருந்தார்கள். அவர்களுக்கு எமது இதயபூர்வமான நன்றி யறிதலைச் சமர்ப்பிக்கின்றோம். மட்டக் களப்பு மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற உதவிப்பணிப்பாளர் திரு. பொன். செல்வநாய கம் அவர்களும், மாவட்ட முகாமையாளர் திரு. தவராஜா அவர்களும் நிதி சேகரிப்பதி லும், விழாக்களை நடத்துவதிலும் சிறப்பாக ஒத்துழைப்பு நல்கினார்கள். அவர்களுக்கும் நாம் நன்றி கூறுகிறோம்.

இன்னும் பல அன்பர்கள் விழாச்சபை அங்கத்தவர்களாகவும், அல்லாமலும் பலவழி களிலும் எமது பணிகள் நிறைவேறத் தமது பங்களிப்பை நல்கியுள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன் றிகள் உரித்தாகுக. தனித்தனியே அவர்களுக்கு நன்றிகூற இயலாமைக்கு வருந்துகிறோம்.

எமக்கு நிதியுதவி வழங்கி ஆதரித்தவர்கள் பலர். சிறப்பாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், இளைஞர் சேவைகள் மன்ற அங் கத்தவர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் இவர்கள் அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிக்கிறோம்.

எமது பணிகள் நிறைவேற எமக்குப் பக் கத்துணையாக அமைந்த இறைவனின் திரு வருளையும் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந் தாஜீ மஹராஜ், ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந் தாஜீ மஹராஜ், ஸ்ரீமத் சுவாமி அஜராத் மானந்தாஜீ மஹராஜ் முதலாம் துறவியரின் ஆசிகளையும் நினைவுகூர்ந்து எமது வணக் கத்தைச் சமர்ப்பிக்கின்றோம்.

இவ்விழாவின் ஞாபகார்த்த மலரிலே ஆசி மொழிகளையும், கட்டுரை கவிதைகளையும் வழங்கிய சமயப் பெரியார்களுக்கும், பேரறி ஞர்களுக்கும் எமது சிறப்பான நன்றியறித லைச்சமர்ப்பிக்கின்றோம். இந்த ஞாபகார்த்த மலர் அச்சேறி வெளிவருவதற்கு அரும்பணி யாற்றியவர்கள் குறிப்பாக மூவர் திருவாளர் காசுபதி நடராஜா, ஆசிரியமணி த. செல்வ நாயகம், திருமதி. சிவபாதசுந்தரம் இவர் களுக்கு எமது இதயபூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

**கு. தெட்ஷணாமூர்த்தி**
செயலாளர்,
சுவாமி விவேகானந்தர் சிகாகோ
அனைத்துலகச்சமயப் பெருமன்றப்
பேருரை நூற்றாண்டு விழாச்சபை
மட்டக்களப்பு.

---

நாம் யாவரும் உலகுக்குக் கடன்பட்டவரேயன்றி உலகம் நமக்குக் கடன்பட்டிருக்கவில்லை என்பதை மறக்கலாகாது. உலகுக்கு ஏதேனும் நன்மைசெய்ய வாய்ப்புப் பெறுவதே நமக்குக் கிட்டிய பேறாகும். உலகுக்கு நல்லது செய்வதில் நாம் நமக்கே நல்லது செய்து கொள்ளுகிறோம்.

— **ஸ்வாமி விவேகானந்தர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்த இதயம்

- ஸ்வாமி கமலாத்மானந்தர் -
( ஆசிரியர் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் )

## வேறுபாடு

பண்டைய இந்தியாவின் வரலாற்றில் வீர சிவாஜிக்குக் குருவாக விளங்கிய ஸமர்த்த ராமதாசரும், விஜயநகர சாம்ராஜ்யத்தை உருவாக்கிய வித்தியாரண்ய முனிவரும் ஆன்மீக அடிப்படையில் வாழ்ந்து மக்களுக்கு வழி காட்டியிருப்பதைப் பார்க்கிறோம். அவர்கள் இருவருமே துறவற வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார்கள். அவர்களைப் போலவே மிகச் சிறந்த தேச பக்தராகவும், அதே சமயத்தில் ஆத்மஞானியாகவும் நம்மிடையே சமீபகாலத்திலே வாழ்ந்தவர் விவேகானந்தர்.

தற்கால இந்திய மக்களின் முன்னேற்றத்தைக் குறித்தும் தேசபக்தியைக் குறித்தும் பேசியும் வாழ்ந்தும் காட்டியவர்கள் பலர். அவர்களுடைய மேலான இலட்சியம் தலை வணங்கிப் பாராட்டுதற்கு உரியது. ஆகவே அந்த இலட்சியத்தை மேற்கொண்டு வாழ்ந்த உத்தமர் ஒவ்வொருவருக்கும் நாம் மனமார நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த வரிசையிலே விவேகானந்தரின் வாழ்வும் வாக்கும், நவீன இந்தியாவில் வரலாற்றில் சிறப்பான தனி இடத்தைப் பெறுகின்றன.

நேரிடையாகவோ மறைமுகமாகவோ விவேகானந்தர் அரசியலிலே ஈடுபட்டது கிடையாது. ஆனால் அவருடைய எழுச்சிதான் உறங்கிக் கிடந்த இந்தியாவை எல்லாவகைகளிலும் பலமாகத் தட்டி உலுக்கியது. அதன் ஓர் அம்சமாகவே இந்தியச் சுதந்திரப் போராட்டத்திற்கு வித்திட்ட முதலாமவர்களின் முதற்பட்டியலிலேமுதலிடத்தை,சுவாமி விவேகானந்தருக்குப் பெருமையோடு இந்த நாட்டில் தோன்றிய உண்மைத் தேசபக்தர்கள் மனமுவந்து வழங்கியிருக்கிறார்கள்.

உயர்ந்த மனோபாவம் கொண்ட பல தேசபக்தர்களைப் போலவே, சுவாமி விவேகானந்தரும் தேசபக்தியையும் பாமரர் முன்னேற்றத்தையும் குறித்து விரிவாகப் பேசியிருக்கிறார். பார்ப்பதற்கு, இந்த வகையைச் சேர்ந்த சான்றோர்களின் தேசபக்தியைப் போலவே விவேகானந்தரின் தேசபக்தியும் இருப்பதாகத் தோன்றும். ஆனால், மற்றத் தேசபக்தர்களுக்கும் சுவாமி விவேகானந்தருக்கும் அடிப்படை மனநிலைகளில் சில வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன.

பொதுவாகச் சகோதர மக்களிடம் கொள்ளும் தூய அன்பும், இரக்கமும், நாட்டின் முன்னேற்றத்தில் கொள்ளும் ஆர்வமும், ஒருவரிடம் தேசபக்தியைத் தோற்றுவிக்கின்றன. சுவாமி விவேகானந்தரின் தேசபக்தியில் இந்தப் பண்புகள் பரிபூர்ணமான அளவிலே இருந்ததுடன் 'ஆன்மீக அநுபவம்' என்னும் உயர்வற உயர்ந்த ஒரு பண்பும் கலந்திருந்தது. இதுவே பொதுவாக மற்றத் தேசிய வீரர்களின் தேசபக்திக்கும் சுவாமி விவேகானந்தரின் தேசபக்திக்கும் உள்ள குறிப்பிடத்தக்க வேறுபாடு எனலாம்.

விவேகானந்தரின் தேசபக்திக்குள்ள ஓர் ஈடு இணையற்ற தனிப்பெருஞ் சிறப்பு, அவருடைய ஆன்மீக அனுபூதியிலேதான் அடங்கியிருக்கிறது. ஆகவேதான், அவரால் சமயத் துறையிலும் சமுதாயத்துறையிலும் குறிப்பிடத்தக்க நிலையான ஒரு மறுமலர்ச்சியை ஒரே சமயத்தில் தோற்றுவிக்க முடிந்தது. இந்த இரண்டு துறைகளில் ஏதாவது ஒன்றில் குறிப்பிடத்தக்கவர்களாக நாம் பலரைச் சொல்லமுடியும். இரண்டிலும் குறிப்பிடத்தக்கவர்களாகச் சிலரை மட்டுமே நாம் சொல்ல முடியும். அவர்களில் விவேகானந்தருக்கே முதலிடம் என்பதை விளக்கிச் சொல்லவேண்டிய அவசியமே இல்லை.

## தெய்வீகமே அடிப்படை

எங்கும் எதிலும் இறைவனைக் காண்பதே மத வாழ்க்கையில் ஒருவர் பெறக்கூடிய மிக மிக உயர்ந்த நிலையாகும். 'ஈசாவாஸ்யம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதம் ஸர்வம்', 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம' என்று வேதங்கள் குறிப்பிடுகின்றன. இத்த கைய மேலான அனுபவம் குறைவறக் கைவரப் பெற்றவர் விவேகானந்தர். இதுவே, அவரு டைய சமுதாய முன்னேற்றம் பற்றிய எல் லாக் கருத்துக்களுக்கும் அடிப்படை

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற தலைப்பில் அந்தக் கருத்துக்களைக் கூர்ந்து கவனித்தால் சுவாமிஜியின் கருத்துக் கள் எந்தக் கோணத்திலிருந்து சொல்லப்பட் டிருந்தாலும், எங்கும் எதிலும் தெய்வத்தைக் காணும் பண்பு பொதிந்தவையாக இருப்ப தைக் காணலாம்.

மனிதன் கடவுள் நிலையைப் பெறவேண் டும். அதன் முதல் கட்டமாக அன்னியர்களின் பிடியிலிருந்து அவன் விடுதலை பெறவேண்டும். அதாவது ஆன்மிக விடுதலைக்குத் தேசிய விடுதலை முதலாவதாகத் தேவை என்பதை விவேகானந்தர் உணர்ந்திருந்தார்.

எனவேதான் சீர்திருத்தம், பாமரர் முன் னேற்றம், தேசபக்தி, தேசத் தொண்டர்கள் பெற்றிருக்கவேண்டிய பண்புகள் ஆகியவை பற்றி அழுத்தம் திருத்தமாக அவர் ஏராள மாகப் பேசினார்.

மனிதன் உண்மையில் தெய்வமே ஆவான். ஆனால் நடைமுறை வாழ்க்கையிலோ, அவன் தாழ்வின் பாதாளத்தில் புழுவைப் போல ஊர்ந்து நெளிந்தபடி இருக்கிறான் - இதைப் பொறுக்கமாட்டாமல் பாமரர் முன்னேற்றம் பற்றியும் தேசபக்தியைப் பற்றியும் இதய இரத்தம் கசிய விவேகானந்தர் உள்ளம் நெகிழ்ந்து பல கருத்துக்களை மழைபோலப் பொழிந்திருக்கிறார்.

''கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடி கொண்டிருக்கிறார். இதைத் தவிர வேறு ஒரு கடவுள் இல்லை - இந்த உண்மையை எவ் வளவோ தவங்களுக்குப் பிறகு நான் புரிந்து கொண்டிருக்கிறேன். மக்களுக்குச் சேவை செய் பவன் உண்மையில் கடவுளுக்குச் சேவை செய் பவனாகிறான்'' என்பதைப் போன்ற சுவாமி விவேகானந்தரின் பல கருத்துக்கள் பலரும் அறிந்தவை.

### பேலூர் மடத்தில்

சுவாமி விவேகானந்தர் ஒரு சமயம் பேலூர் மடத்தில் இருந்தார். அப்போதுதான் மடம் உருவாகிக்கொண்டிருந்தது. மடத்தில் கட்டிட வேலைகளும் நடைபெற்று வந்தன.

ஸாந்தால் என்ற வகுப்பினர், சமுதாயத் தின் 'மேற்குடி' மக்களால் தாழ்ந்த குலத் தைச் சேர்ந்தவர்கள் என்று ஒதுக்கிப் புறக் கணிக்கப்பட்டவர்கள். வறுமையும் எளிமை யும் மிக்க அந்த வகுப்பைச் சேர்ந்த தொழி லாளர் சிலர், பேலூர் மடத்தில் தோட்ட வேலை செய்வதற்காக வந்திருந்தார்கள்.

சுவாமிஜி அந்தத் தொழிலாளர்களுடன் மனம் திறந்து பேசிக்கொண்டிருப்பார். அவர் களும் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவ ருடன் பழகுவதைப்போலவே சுவாமிஜியிடம் நெருங்கிப் பழகினார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் துன்பங்களை எல்லாம் ஆழ்ந்த அனுதாபத்துடனும் கவனத்துடனும் சுவாமிஜி கேட்டுக்கொண்டிருப்பார். அந்தத் தொழிலா ளர்களிடம் சுவாமிஜிக்கு எவ்வளவு ஈடுபாடு இருந்தது என்பதை, அவர் தம்மைக் காண வந்த பெரும் கனவான்களிடம், ''நான் இந்த ஸாந்தால்களுடன் இருப்பதிலேயே எல்லை யில்லாத மகிழ்ச்சியைக் காண்கிறேன்'' என்று சொல்லியிருப்பதன் மூலம் அறியலாம்.

அந்தத் தொழிலாளர்களிடமே கேஷ்டா என்ற பெயருள்ள ஒருவன் இருந்தான். சுவாமி ஜிக்கு அவன்மேல் அபரிமிதமான அன்பு இருந் தது. இருவரும் மிகவும் நெருக்கமாகப் பழகி னார்கள்.

தொழிலாளர்களின் வேலைகளைக் கவ னித்து மேற்பார்வையிடும் பொறுப்பு, சுவாமி அத்வைதானந்தருக்குத் தரப்பட்டிருந்தது.

சுவாமிஜியும் தொழிலாளர்களும் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருப்பார்கள். ஆகவே தொழிலாளர்கள் செய்துவந்த கட்டிட வேலை யும் அவ்வப்போது தடைப்பட்டது. இதைக் கவனித்த அத்வைதானந்தர் ஸாந்தால்களை மிகவும் கோபித்துக்கொண்டார். இது சுவாமி ஜிக்குத் தெரியவந்தது. அவர் அத்வைதானந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரை அழைத்து, ''இந்த ஏழை எளிய மக்களிடம் அதிகப்பட்சம் முடிந்தவரையிலும் தயை காட்டவேண்டும். அவர்களைக் கண்டிக்க வேண்டாம்'' என்று அன்பு ததும்பக் கூறினார். ஸாந்தால்களிடம், ''இனிமேல் உங்களைக் கடிந்துகொள்ள வேண்டாம் என்று அத்வைதானந்தரிடம் சொல்லி வைத்திருக்கிறேன்'' என்று இதயத்தைத் தொடும் வகையில் தமக்கே உரிய இயல்போடு உறுதி கூறினார்.

ஒரு சமயம் சுவாமிஜியும் கேஷ்டாவும் வழக்கப்படி பேசிக்கொண்டிருந்தார்கள். கேஷ்டா தன் துன்பங்களையெல்லாம் சுவாமிஜியிடம் தெரிவித்தான். அவற்றைக் கேட்டவுடனே சுவாமிஜியின் கண்கள் குளமாகிவிட்டன. கண்ணீர் விட்டே அவர் அழுதுவிட்டார். கேஷ்டாவும் இதை எதிர்பார்க்கவில்லை. அவனுக்கே பொறுக்கமுடியாமல் சுவாமிஜியிடம் அவன், ''சுவாமிஜி! இங்கிருந்து போய்விடுங்கள். உங்களை அழவைத்து எங்கள் கஷ்டத்தை நான் சொல்லமாட்டேன்'' என்று சொன்னான்.

ஒருநாள் அந்த ஸாந்தால் தொழிலாளர்களுக்குத் தடபுடலாக ஒரு பெரிய விருந்து வைக்கவேண்டும் என்று சுவாமிஜி தீர்மானித்தார். அந்த யோசனையை அவர் ஸாந்தால்களிடம் தெரிவித்தார்.

ஸாந்தால்களோ, ''நீங்கள் உணவில் உப்புப்போட்டுக் கொடுப்பீர்கள். அதைச் சாப்பிட்டால் எங்களுடைய ஜாதி போய்விடும். ஆகவே நீங்கள் கொடுக்கும் விருந்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம்'' என்று சொல்லி மறுத்தார்கள்.

சுவாமிஜி, ''உப்பை நான் உணவில் கலக்காமல் தனியாக உங்களுக்குத் தரச் செய்கிறேன்'' என்று அவர்களுடைய மனம் புண்படாதபடி ஆறுதல் சொல்லிச் சமாதானப் படுத்தினார்.

இனிப்பு, பூரி, கறிவகைகள், பழங்கள், தயிர் என்று தாமே முன்னின்று பெரிய விருந்துக்குச் சுவாமிஜி ஏற்பாடுகளைச் செய்தார். அவற்றைக் கொண்டு ஸாந்தால்களுக்கு மன நிறைவோடு விமரிசையாக விருந்து வைத்தார். அவர்கள் திருப்தியுடன் சாப்பிடுவதை மகிழ்ச்சி பொங்க அருகிலேயே இருந்தும் கவனித்தார்.

வாழ்க்கையில் அதுவரையிலும் அவ்வளவு உயர்ந்த உணவு வகைகளை அந்த ஸாந்தால்கள் சாப்பிட்டதே கிடையாது. அவர்கள், ''சுவாமிஜி! இந்தப் பலகாரங்களையெல்லாம் எங்கேயிருந்து கொண்டு வந்தீர்கள்? நாங்கள் கனவில்கூட இப்படிப்பட்ட உணவு வகைகளைப் பார்த்ததே இல்லை'' என்று சொன்னார்கள்.

விருந்து முடிந்ததும் சுவாமிஜி அவர்களிடம் உள்ளம் நெகிழச் சொன்னார்: ''நீங்கள் எல்லோரும் நாராயணர்கள். உங்களுக்கு உணவிட்டு இன்றைய தினம் நான் ஆண்டவனுக்கே உணவளித்துவிட்டேன்.''

அதோடு மட்டுமன்றி, இந்த நிகழ்ச்சியைப் பற்றி வேறொரு சமயம் தமது சீடர் ஒருவரிடம் பேசியபோதும், பின்வருமாறு சுவாமிஜி குறிப்பிட்டிருக்கிறார்: "நான் விளையாட்டுக்காகச் சொல்லவில்லை, உண்மையாகவே பகவானை நான் அந்த ஸாந்தால்களிடம் பார்த்தேன். குற்றமற்ற இந்த எளிய இதயம் படைத்த மக்களிடம் காணாமல் வேறு எங்கே ஆண்டவனைக் காணமுடியும்?''

### விவேகானந்தர் செய்த பூஜை

சுவாமி விவேகானந்தர் ஸாந்தால்களிடம் தெய்வத்தைக் கண்டார் என்பதை மேலே பார்த்தோம். இதைப்போலவே சுவாமி போதானந்தர் தெரிவித்துள்ள நிகழ்ச்சி ஒன்றையும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும்.

சுவாமிஜியின் சீடர்களிலே சுவாமி போதானந்தரும் ஒருவர். அவர் சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் சிலகாலம் தங்கியிருந்த போது, மடத்தில் இருந்த துறவிகள், ''சுவாமிஜியுடன் நீங்கள் பெற்ற அனுபவங்கள் சிலவற்றை எங்களுக்குச் சொல்லவேண்டும்'' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுக்கொண்டார்கள். அதற்கு விடையாக, சுவாமி போதானந்தர் தெரிவித்த கருத்துக்களில் ஒருபகுதி அப்படியே கீழே தரப்படுகிறது.

''ஒரு நிகழ்ச்சியை நான் (சுவாமி போதானந்தர்) உங்களுக்குச் சொல்கிறேன். ஒரு சமயம் சுவாமிஜி, தாம் அன்றைய தினம் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பூஜை செய்து வழிபடப்போவதாகச் சொன்னார். ஆகவே சீடர்களான நாங்கள் அனைவரும் சுவாமிஜியின் பூஜை முறையைக் கவனிப்பதற்காகச் சென்றோம்.

பூஜைக்கிரியைகளை அவர் எப்படிச் செய்யப்போகிறார் என்பதைக் காணும் ஆவலால் அங்கே கூடினோம்.

''முதல்முதலாக அவர் பூஜை செய்பவர் உட்காரவேண்டிய ஆசனத்தில் உட்கார்ந்தார். பிறகு தியானம் செய்ய ஆரம்பித்தார். நாங்களும் தியானம் செய்ய ஆரம்பித்தோம்.

''வெகு நேரம் கழிந்தது. யாரோ ஒருவர் எங்களுக்கு மத்தியிலே நடந்துகொண்டு இருப்பதாக எனக்கு உணர்ச்சி ஏற்பட்டது. ஆகவே, இந்தச் சமயத்தில் நடந்து செல்வது யாராக இருக்கக்கூடும் என்பதைப் பார்ப்பதற்காக நான் கண்களைத் திறந்தேன். சுவாமிஜியே அவர். அவர் ஆசனத்தை விட்டு எழுந்திருந்து, இராமகிருஷ்ணரை வழிபடுவதற்காக வைத்திருந்த பூத்தட்டைக் கையில் ஏந்தி வந்தார். ஆனால் மலர்களை ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவுருவத்தின் முன்பு சமர்ப்பிப்பதற்குப் பதிலாக அவர் தமது சீடர்களாகிய எங்களை நோக்கி வந்தார். மலர்களைச் சந்தனத்தில் தோய்த்தெடுத்து எங்கள் ஒவ்வொருவருடைய தலைமீதும் ஒரு மலரை இட்டார்.

''பொதுவாக வைதிகச் சம்பிரதாயங்களின்படி அவருடைய இந்தச் செய்கை, முறைக்கு மாறான ஒன்றாகும். தெய்வத்தை வழிபடுவதற்காக வைத்திருந்த மலர்களைக் கொண்டு, குரு ஒருவர் தம்முடைய சீடர்களுக்கு இடுவதைக் கனவில்கூட யாரும் நினைத்துப் பார்க்க மாட்டார்கள். மேலும், முதலில் வேறொரு காரியத்திற்குப் பயன்படுத்தப்பட்ட எந்தப் பொருளையும் பிறகு தெய்வத்திற்குப் பயன்படுத்துவது தவறாகும்.

''ஆனால் சுவாமிஜியோ ஸ்ரீராமகிருஷ்ண பகவானின் பீடத்தை அணுகி, தட்டில் மீதியிருந்த மலர்களை அவருடைய திருவுருவத்தின் முன்பு சமர்ப்பித்தார். மேலும், வழக்கமாகச் செய்யவேண்டிய பூஜைக்கிரியைகளையும் அவர் செய்யாமலே விட்டுவிட்டார்.''

பின்பு பரமஹம்சரின் பூஜையின்போது, வழங்கவேண்டிய நைவேத்தியத்தைக் கொண்டு வந்து வைக்கும்படி சைகை செய்தார்.

''நைவேத்தியத்தைப் பகவானுக்குச் சமர்ப்பிக்கும் நேரத்தில் பூஜையறையில் ஒருவரும் இருப்பது வழக்கமில்லை. ஆகவே நாங்கள் அனைவரும் எழுந்திருந்து அறையை விட்டு வெளியேறினோம். அந்தச்சமயத்தில் சுவாமிஜி ஸ்ரீகுருமகராஜைப் பார்த்து, ''நண்பரே, இந்த நைவேத்தியத்தை நீங்கள் சாப்பிடுங்கள்'' என்று சொன்னது எங்கள் காதில் விழுந்தது. பிறகு அவர் பூஜையறையைவிட்டு வெளியே வந்து, அவருடைய அந்த அறையின் கதவுகளை மூடினார். அப்போது அவருடைய கண்கள் பக்திப் பரவசத்தால் செக்கச்செவேலென்று சிவந்த நிறம் கொண்டவையாக மாறியிருந்தன.''

இந்தச் செயலைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சுவாமி போதானந்தர் உணர்ச்சிவசப்பட்டுவிட்டார். சில நிமிடங்கள்வரை அவரால் பேசமுடியவில்லை. பிறகு மயிலாப்பூர் மடத்தின் சாது ஒருவர் அவரிடம், ''மகராஜ், சுவாமிஜி அவ்விதம் தம்முடைய சீடர்களையே வழிபட்டதன் கருத்து என்ன?'' என்று கேட்டார். அதற்குப் பதிலாக, சுவாமி, போதானந்தர் கூறியது வருமாறு:

''உண்மையிலேயே சுவாமிஜி அந்தச் சமயத்தில் தம்முடைய சீடர்களைப் பூஜிக்கவில்லை எங்கள் ஒவ்வொருவருடைய தலையின் மீதும் பூவை வைத்தபோது, ஒவ்வொரு சீடரிடமும் எழுந்தருளியிருந்த ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவடிகளில்தான் மலரை உண்மையில் சமர்ப்பித்தார். அப்படிச் செய்ததன் மூலம் எங்களிடம் எழுந்தருளியுள்ள பரமஹம்சரின் தெய்வீகச் சாந்நித்யத்தை எழுப்பியருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்தச் சாந்நித்தியம் ஒவ்வொருவரிடமும் வெவ்வேறு வகையில் வடிவெடுத்திருந்தது. சிலர் பக்தி நிறைந்தவர்களானார்கள். மற்றும் சிலரிடம் ஞான உணர்வுகள் எழுப்பப்பட்டன. சுவாமிஜி, தாம் அப்படிச் செய்த பூஜையின் மூலமாக எங்களுக்குள்ளே இருந்த தெய்வீக இயல்புகளை எழுப்பிவிட்டார் எஞ்சியிருந்த மலர்கள் எந்த விதத்திலும் அசுத்தம் அடையவில்லை.''

''பீடத்தில் இருந்த ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவுருவப் படத்தில் சுவாமிஜி எந்தத் தெய்வீகச் சாந்நித்தியத்தைக் கண்டாரோ, அதே தெய்வீகச் சாந்நித்தியத்தையே அவர் தமது சீடர்களிடமும் கண்டார். ஆகவே ஸ்ரீராமகிருஷ்ணரின் பீடத்தில் மீதியிருந்த மலர்களை அவர் அர்ப்பணம் செய்தார். அப்போது சுவாமிஜி, தமது இஷ்ட தெய்வத்தினிடம் தோழமை உறவையே கொண்டிருந்தார். அந்தக்காரணத்தினால்தான், நைவேத்தியத்தைப் படைத்தபோது ஸ்ரீராமகிருஷ்ணரை அவ்விதம் 'நண்பரே' என்று அழைத்தார்.''

## முடிவுரை

சுவாமிஜியின் தேசபக்திக் கருத்துக்களுக்கு எல்லாம், அவருடைய ஆன்மிக உணர்வுகளே ஆதாரசுருதியாக அமைந்திருக்கின்றன. சிலர் சுவாமிஜியின் தேசபக்தி, கல்வி, பாமரர் முன்னேற்றம் ஆகிய கருத்துக்களை மட்டும் எடுத்துக்கொண்டு பாராட்டுவது உண்டு. அத்தகையவர்கள், ''விவேகானந்தரின் தேசபக்திக் கருத்துக்கள் அனைத்தும் எங்களுக்கு முற்றும் உடன்பாடானவை. அவர் மதத்தைப் பற்றித் தெரிவித்துள்ள கருத்துக்களுள் எதைப்பற்றியும் எங்களுக்கு அக்கறை இல்லை; அவை தேவையற்றவை'' என்று சொல்வதுண்டு. ஆனால் இவ்விதம் சுவாமிஜியின் ஒரு பகுதிக் கருத்துக்களை மட்டும் ஏற்றுக்கொண்டு மறு பகுதியாக விளங்கும் பெரும்பகுதியை விலக்கி விடுவது பொருந்தாது. ஏனென்றால், கிட்டத்தட்ட ஓர் அவதாரபுருஷர் என்று சொல்லத்தக்க வாழ்க்கையாகச் சுவாமிஜியின் வாழ்க்கை அமைந்திருக்கிறது. உண்மை இவ்விதம் இருக்க, அவரிடமிருந்து மிகமுக்கியமான பகுதியாகிய ஆன்மிகத்தை நீக்கிப் பார்த்தால், சுவாமிஜியை முழு அளவில் புரிந்துகொள்ள முடியாது. அப்படிப் பார்ப்பவர்கள், குருடர்கள் கண்ட யானையைப் போலச் சுவாமிஜியைப் பற்றி ஒரு சிறிது மட்டுமே புரிந்துகொண்டவர்கள் என்று மட்டும்தான் சொல்லவேண்டியிருக்கிறது.

---

உன் உதவி இல்லாவிடில் ஓர் எறும்பேனும் வாழமுடியாமல் தவிக்கும் என எண்ணுகிறாயா? அப்படி எண்ணுவது பெரும் அபசாரமாகும். உன் உதவியை உலகம் தினையளவும் வேண்டி நிற்கவில்லை. ஆண்டவனுக்காகப் பணிசெய்யும் பேற்றினைத்தான் அவன் மக்களுக்கு ஒரு உரிமையாக அளித்திருக்கிறானேயன்றி, உதவி செய்வதை அல்ல. '' உதவி '' என்ற பதத்தை உன் உள்ளத்தில் இருந்து வெட்டி எறிந்து விடு. நீ உதவ இயலாது. நீ வணங்கத்தான் முடியும். வணங்கு. உலகம் முழுவதையும் அந்தப் பணிவான மனநிலையுடன் பார். பற்றுக்கள் அப்போது உன்னை அறவே விட்டுவிடும்.

— ஸ்வாமி விவேகானந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறப்பு விருந்தினரின்
வரவேற்பும், ஊர்வலமும்.

ஸ்ரீமத் சுவாமி
ஆத்மகனானந்தஜீ மஹராஜ்
(தலைவர் ராமகிருஷ்ண மிஷன்
இலங்கைக்கிளை)

ஸ்ரீமத் சுவாமி
கஹனானந்தஜீ மஹராஜ்
(தலைவர், ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன்
சென்னை)



சிறப்பு விருந்தினராக வந்த

ஸ்ரீமத் சுவாமி
கஹனானந்தஜீ மஹராஜ்



சிறப்பு விருந்தினராக வந்த

ஸ்ரீமத் சுவாமி
ஸ்ரீதரானந்தஜீ மஹராஜ்
(ஸ்ரீராமகிருஷ்ண நிலையம், லக்னோ)

அவர்களின் சொற்பொழிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது சமூக நலப் பணிகளிற் சில

### வீடற்றோருக்கு வீடுகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனை உருவாக்கும் மதத்தை வழங்கிய சுவாமி விவேகானந்தர்

— சுவாமி அஜராத்மானந்தா

சுவாமி விவேகானந்தருடைய சிந்தனைகள் பல பரிமாணங்களைக் கொண்டன. குறுகிய கோட்பாடுகள், கண்மூடித்தனமான சம்பிரதாயங்கள், வெற்றுச் சடங்குகள் ஆகிய எல்லைகளைக் கடந்தன. அவர் மனித இனத்தை முழுமையாக நேசித்தார். அவர் மனித இனத்தின்மீது கொண்ட அன்பு அவரை இந்திய நாடெங்கும் சஞ்சரிக்கும் துறவியாக யாத்திரை செல்ல உந்தியது. அவருடைய தேச சஞ்சாரத்தின்போது ஏழைகளுக்காக, தாழ்த்தப்பட்டவர்களுக்காக, படிப்பறிவற்ற பாமரர்கட்காக கண்ணீர் சிந்தினார். அரசர்களிடமும், பிரபுக்களிடமும், தாழ்த்தப்பட்டவர்களினதும் ஏழைகளினதும் மேம்பாட்டுக்கு உதவுமாறு பரிந்து வேண்டினார். மனிதனின் உன்னத தெய்வீக தன்மையை எடுத்துக்கூறுவதற்காக அக்காலத்தில் பல சிரமங்களுக்கும் மத்தியில் பல்லாயிரம் மைல்கள் கடந்து மேல் நாடு சென்றார். அங்கு மத அடிப்படைவாதிகளின் எதிர்ப்புக்களிடையேயும் தனது வாழ்வளிக்கும் உயர் கருத்தை மக்களுக்கு அச்சமின்றி வழங்கினார். சுவாமிஜியினுடைய பேச்சை கேட்பவர்களுக்கு தாங்கள் இழந்த தங்கள் அரும்பெரும் சொத்தை மீண்டும் பெற்றுவிட்டதுபோல உணர்வு ஏற்பட்டதாம். மார்த்தா என்ற பெண்மணி சுவாமிஜியினுடைய சொற்பொழிவைக் கேட்டபின் தனக்கு ஏற்பட்ட உள்ளுணர்வை பின்வருமாறு வெளிப்படுத்துகிறார். ''தெய்வீகம் நமக்குள் இருக்கிறது. இதுவே மனிதனின் உண்மையான இயல்பு என்று நம்புவதைவிட அதிகமாக நாம் எதைக் கேட்கமுடியும்? இந்த உபதேசத்தை பெற்ற நான் என்னுடைய சொந்தமான இல்லத்திற்கு வந்துவிட்டதாக உணர்கிறேன்!''

சுவாமி விவேகானந்தருடைய கருத்துக்கள் மக்களிடையே ஆன்ம விடுதலை வேட்கையை தூண்டியது. சிகாகோவில் ''இந்து மதம்'' என்ற தலைப்பில் ஓர் அரிய உரையாற்றினார். இந்து மதத்தின் சாரம் எல்லாம் திரட்டித்தரும் சிறப்பான உரையாக அது அமைந்திருந்தது. அவ்வுரையில் விதியைப் பற்றியும், வழிபாட்டைப்பற்றியும் ஆத்மாவின் இயல்புபற்றியும் இறையியல்புபற்றியும் இவற்றையெல்லாம் இணைக்கும் அடிப்படையான வேதாந்த தத்துவம் பற்றியும் விளக்கினார். ஆத்மா நித்திய சுத்தமானது. எப்போதும் விடுதலை பெற்றது. என்ற அமிர்த தத்துவத்தை இந்த உரையில் அமெரிக்கர்களுக்கு அளித்தார். ஆத்மாவுக்கு படைப்பும் இல்லை அழிவும் இல்லை. சாவு என்பது ஒரு உடலில் இருந்து இன்னொன்றுக்கு மாறி கரும பயனை அனுபவிப்பதுதான் என்று கூறினார். ஆத்ம விடுதலை என்ற ஆனந்த நிலையை அடைய வழி அகம்பாவத்தை ஒழிப்பதுதான். ''நான்'' என்ற எண்ணத்தை அளிப்பது சூனியத்தில் முடிவதல்ல. உலகம் எல்லாம் தானாககாணும் பூரணத்துவத்தில் நிறைவதாகும் என்று கூறினார். அப்படி ''நான்'' என்பதை அழித்து தானாவதுதான் சாவை வெல்லும் அமர நிலையாகும் என்று கூறினார்.

"ஆதலால் எல்லையற்று எங்கும் நிறைந்திருக்கின்ற அந்த தனித்தன்மையை பெற வேண்டுமாயின் துன்பம் நிறைந்த இந்த உடற்சிறை எனும் தனித்தன்மை போகவேண்டும். நாம் உயிரோடு ஒன்றிவிடும்போதுதான் மரணம் அகலமுடியும். இன்பத்துடன் ஒன்றிவிடும் போதுதான் துன்பம் அகலமுடியும். அறிவோடு ஒன்றிவிடும்போதுதான் பிழைகள் அகலமுடியும் இதுதான் அறிவியலுக்கு ஒத்தமுடிவாகும். உடல் சார்ந்த தனித்தன்மை நிலை ஒரு மாயை இடைவெளியற்று பரந்து நிற்கும் சடப்பொருளாகிய கடலில் தொடர்ந்துமாறிக் கொண்டே செல்லும் ஒரு சிறிய பொருளே என் உடலென்று அறிவியல் நிரூபித்துவிட்டது. பௌதிகத்தின் மாற்று அங்கமாகிய ஆத்மாவைப்பற்றிய அதே முடிவுதான் "அத்வைதம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறி, ஒவ்வொரு ஜீவனும் பரம் பொருளே என்ற மகாவாக்கிய உபதேசத்தை முழங்கினார்.

தானும் பரம்பொருளும் ஒன்றே. அதே போல் எல்லா ஜீவர்களும் பரம்பொருளே என்று உணர்ந்த ஒருவன் எப்படி எல்லா ஜீவர்களையும் தானாகக் கருதுவான் என் பதையும் சுவாமிஜி எடுத்துக்கூறினார். தான் பிரமம் என்ற உணர்வின் ஆனந்தம் அப் போது பிறரைத் தானாக எண்ணிச் சேவை புரியும் செயலில் ஆனந்தமாவதை குறிப்பால் உணர்த்தி, ஆனபடியால் வேதாந்தம் எப்படி உலகப் பணிக்கு அறை கூவுகிறது என்பதைச் சுட்டிக்காட்டினார். வேதாந்தம் எந்த தனி யொரு நாட்டினருக்கும், ஜாதியினருக்கும், மதத்தினருக்கும் மட்டும் உரியதல்ல என்ற பேருண்மையை உணர்த்தும் முகமாக அமெ ரிக்கர்களை ''அமர ஆனந்தத்தின் வாரிசு களே!'' என்று விளித்தார்,

கேளுங்கள் இந்து மதத்தினர் உங்களை பாவி என்று சொல்ல மறுக்கிறார்கள். நீங்கள் ஆண்டவனின் குழந்தைகள். சாசுவத சுகத் தின் பங்குதாரர்கள். புனிதம் நிறைந்த பூர ணப்பொருள்கள். உலகின் தெய்வங்களாகிய உங்களையா பாவி என்பது? மனிதனை 'பாவி' என்பதுதான் பாவம். மனித இயல்புக்கே அது அழியாத களங்கமாகும். சிங்கங்களே! வீறு கொண்டு எழுங்கள். நீங்கள் அனைவரும் ஆடு கள் என்ற மாயையை உதறித்தள்ளுங்கள். நீங்கள் அழியாத ஆன்மாக்கள்! சுதந்திரமான இறையருள் பெற்ற முடிவற்ற ஆன்மாக்கள். நீங்கள் சடப்பொருள் அல்ல. சடப்பொருள் உங்கள் பணியாள். நீங்கள் சடப்பொருளின் பணியாள் அல்ல. என்று மனிதனின் உண்மை யான உயர் தன்மையை எடுத்து விளக்கினார். உபநிஷதங்களில் மனித ஆத்மாவைப் பற்றிய உயர் கருத்துக்கள் மறைந்து கிடக்கின்றன, அவ்வுண்மைகளை உலக அரங்கில் உலக மொழியில் அரங்கேற்றிய பெருமை சுவாமி விவேகானந்தரையே சாரும்.

அமெரிக்காவில் இனபேதம் தலைதூக்கிய இடங்களில் நீக்ரோக்களை தாழ்வாக நடத்தி னார்கள். சுவாமிஜியையும் நீக்ரோ என தவ றாக நினைத்து சில இடங்களில் அவருக்கு சலுகைகள் மறுக்கப்பட்டன. அத்தகைய இக் கட்டான சூழ்நிலையிலும் அவர் தான் நீக்ரோ அல்ல என்று கூறி சலுகைகளைப்பெற விரும்ப வில்லை. சாதாரண மக்களாகிய நாம் பிற ரைத் தாழ்த்தி உயர முயற்சிக்கின்றோம். பிறருடைய வீழ்ச்சியில் உயர்வுகாண விரும்பு கின்றோம். ஆனால் சுவாமி விவேகானந் தரோ தன்னைப்போல பிறரையும் உயர்த்த முயன்றார். இச்சந்தர்ப்பத்தில் சுவாமிஜி அமெரிக்காவில் தங்கியிருக்கையில் நேர்ந்த சில உருக்கமான நிகழ்ச்சிகளை இங்கு கூறுவது பொருத்தமாகும்.

ஒரு ரயில் நிலையத்தில் சுவாமிஜி இறங் கியபோது அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற் பைக் கண்ட நீக்ரோ சுமை தூக்கி ஒருவன் அவரை அணுகினான். ''இந்த வெள்ளையர் களிடம் என்னைப்போல கறுப்பு தோல் படைத்த தாங்கள் மதிப்புபெற்று இருப்பதை காணக்காண எனக்கு சந்தோசம் தாங்க வில்லை. உங்கள் கையைப்பிடித்து நான் குலுக்க அனுமதிப்பீர்களா என்று ஆர்வத் துடன் கேட்டான் அவன் சுவாமிஜி உடனே அவனது கையை இறுக்கமாக பற்றிக்கொண் டார். ''நன்றி சகோதரா நன்றி'' என்று உணர்ச்சிபூர்வமாக கூறினார். சுவாமிஜி நீக் ரோவில் சிவந்தவர் என நினைத்து ஒதுக்கிய இடங்கள் உண்டு. அப்போதெல்லாம் அவர் தாம் நீக்ரோ அல்ல என்றே சொல்லிக்கொள்ள மாட்டார். பிறகு செய்தித்தாள்களில் அவரது பிரசங்கத்துடன் படத்தையும் கண்டு தங்கள் தவறை உணர்ந்து அவரிடம் மன்னிப்பு கேட் டுக்கொண்டவர்களும் உண்டு. முடிதிருத்தகங் களில்கூட சுவாமிஜிக்கு சிகை திருத்தமுடியாது என்று சொல்லி வெளியேற்றினர். சுவாமிஜி யும் மௌனமாக வெளியேறி விடுவார். "ஏன் சுவாமி நீங்கள் நீக்ரோ அல்ல என்பதை அவர்களுக்கு சொல்லவில்லை?'' என்று மேல் நாட்டு சீடரொருவர் பிற்காலத்தில் விவே கானந்தரைக் கேட்டார். அப்போது சுவாமிஜி என்னது! இன்னொருவரை மட்டமாகச் சொல்லி அதனால் நான் உயருவதா? இந்த பூவுலகத்தில் அதற்காக வரவில்லை என்றார். ஆம் எல்லோரும் தெய்வீகம் பொருந்தியவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் என்பதை எடுத்துச்சொல்வதற்காக அல்லவா அவர் இவ்வுலகுக்கு வந்திருந்தார். முதற் சொற்பொழிவிலேயே அமெரிக்கர்களின் உள்ளத்தை கொள்ளை கொண்ட சுவாமிஜியை தமது இல்லங்களுக்கு அழைத்தவர் பலர். உலகப் பிரசித்திபெற்ற சிகாகோ சொற்பொழிவு ஆற்றிய முதல் நாளன்று சிகாகோ நகரில் பெரும் செல்வந்தர் ஒருவரின் இல்லத்தில் விருந்தினராகத் தங்கினார். இரவில் தமக்காக பட்டுப்பஞ்சு மெத்தை விரித்திருப்பதைக் கண்டவுடன் அவருடைய எண்ணமெல்லாம் இந்தியாவின் ஏழைகள்பால் திரும்பியது. அவர்களது பரிதாப நிலையை எண்ணியெண்ணிக் கண்ணீர் விட்டார்.

நாள் முழுவதும் சுமை தூக்கிவிட்டு எலும்பெல்லாம் நொந்து நொருங்கிவிடும் போல வலிக்க சாலை ஓரத்தில் கட்டாந்தரையிலே கையை வைத்துப் படுக்கும் லட்சக்கணக்கான இந்திய பாமரமக்கள் அவர் கண்முன் தோன்றினர். அவர் சிந்திய கண்ணீர் படுக்கையெல்லாம் நனைத்து விட்டது. மயக்கம் வந்துவிடுகின்ற அளவுக்கு துக்கத்தில் மூழ்கினார் சுவாமிஜி. தள்ளாடியபடி யன்னலருகே சென்றார். நட்சத்திரங்கள் மினிக்கும் இருள் கவிந்த வானத்தை நோக்கினார். சோக உணர்வு மேலிட்ட சுவாமிஜி தரையில் விழுந்து உலக அன்னையை வேண்டினார். ''ஜெகன்மாதா'' என்னுடைய தாயகம் தரித்திரத்தில் திண்டாடும்போது எனக்கு ஏன் இந்த பெயரும் புகழும்? ஆயிரம் ஆயிரம் இந்தியர்கள் அரை வயிற்றுக் கஞ்சிக்கு இல்லாமல் பட்டினியால் சாகும்போது இங்கே போகப் பொருள்களுக்காக இவர்கள் கோடிகோடியாக செலவளிக்கிறார்களே! இது ஏன் தாயே. எனக்கு வழி காட்டு! அவர்களுக்கு நான் எப்படி உதவுவது என ஒரு மார்க்கத்தை காட்டிக்கொடு'' என்று உருகி வேண்டினார் சுவாமி விவேகானந்தர். உண்மையான சமயத்தின் உச்சமான நிலை அன்போடு கூடிய சேவையே என்பதை சுவாமி விவேகானந்தருடைய வாழ்க்கை நமக்கு தெளிவாக விளக்குகிறது.

''கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத்தவிர தனியாக வேறு ஒரு கடவுள் இல்லை - இந்த உண்மையை எவ்வளவோ தவங்களுக்குப் பிறகு நான் புரிந்து கொண்டிருக்கிறேன். மக்களுக்குச் சேவை செய்பவன் உண்மையில் கடவுளுக்குச் சேவை செய்பவனாகிறான்.

—○— —○— —○— —○— —○—

ஏழை ஒருவனுக்கு ஐயமிடும்போது உயர்ந்த பீடத்தில் நின்றுகொண்டு உன் சில்லறையை அவனிடம் வீசாதே. அவனுக்கு ஈவதால் உனக்கே நீ உதவி புரிந்துகொள்ள முடிந்தது என்று உணர்ந்து அப்படி ஒருவன் கிடைத்தானே என்று நன்றி கொள். பெறுபவன் பாக்கியசாலி அல்ல. கொடுப்பவனே பாக்கியசாலி.

— சுவாமி விவேகானந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்த்தையிலே ஒரு மந்திரம் வைத்தனன்!

"திமிலைத்துமிலன்"

வெண்ணிலா வானில் மிதந்து வரச்செந்நெல்
மீதெலாம் தென்றல் மிதந்துவர - கானல்
மண்ணெலாம் நண்டுகள் ஊர்ந்து வரகத்தாழை
மடல்விரிந் தெங்கும் மணம்பரவ - தமிழ்ப்
பண்ணிலே காதல் கவிகுழைத் தேயிளம்
பாவையர் ஆடவர் பால்தொடுக்க - கண்டு
விண்ணவர் கூட வியந்துநிற் கவிசை
மீனினம் பாடுவ தெந்தநிலம்?

இந்த நிலமெங்கள் சொந்த நிலம் என்று
இந்தக் குவலயம் தோன்றியதோ - அன்றே
நந்திடு மானுடர் தொட்டில தாய்த்திகழ்
நற்றவம் பெற்றது எங்கள்நிலம் - இதில்
விந்தைக வில்லை புதுமையில் யிந்த
மேதினி யாவும் வியந்துநிற்க - இசை
தந்த இராவணன் தன்மர பில்புகழ்
தங்கு விபுலனின் தாய்மை நிலம்.

தாய்இவள் மட்டுநன் நாடெனும் நங்கைநாம்
தாங்கு முயிராம் தமிழ்வளர்ப்பாள் - அவள்
வாய்மையில் நல்வளம் ஓங்கும் கலைகளின்
வண்ணம் மிளிரும் மதிவளரும் - அந்தத்
தூய்மையில் ஆன்மிகப் பூமலரும்அதைத்
தூரத்தே சென்றன்றே சொல்லிவைத்தான் - அந்த
ஆய்வுரை யாற்றியோ ஆண்டுநூ றானது
அந்தப் பெருமையில் ஆர்த்தெழுந் தோம்.

ஆர்த்தெழுந் தார்பலர் ஆற்றினார் பேருரை
அத்தனை பேரையும் விஞ்சியதாய் - அந்த
வார்த்தையி லேயொரு மந்திரம் வைத்தனன்
வானவ ராயினார் அச்சபையோர் - மிக
நேர்த்திய தாயவர் சிந்தையைக் கட்டி
நிமிர்த்திய தேயந்த நேயமொழி - அன்று
பார்த்திப னாய்நின்ற வீரத் துறவியின்
பாதத்தி லன்றோஇப் பார்முழுதும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதத் தாயின் தவப்பு தல்வன்தலைப்
பாகையும் காவி யுடையுமுளோன் - அந்த
நேரத்தி லேயவன் தோற்றம் எளிமைதான்,
நெஞ்செலாம் காந்தமாய்ப் பாய்ந்ததெது? - மின்
சார அதிர்ச்சியாய் அத்தனை பேரையும்
சாய்ந்து விழுந்திடச் செய்ததெது? - அந்தத்
தீர மொழியிலே அத்தனை சக்தியும்
தேக்கி விழித்தெழச் செய்ததெது?

விழித்தவர் தம்முள மெய்மறந் தாரந்த
வீறு கொளுமொழி யாலுயர்ந்தார் - தம்மை
அழுத்திய ஆன்மிகம் அங்குணர்ந் தார்மத
ஆழத்தின் தத்துவ மஃதறிந்தார் - ஞானச்
செழிப்பிலே தங்கள் செருக்கழிந் தார்கீழைத்
தேயத்தின் மெய்மையைத் தேர்ந்துகொண்டார்-அந்தக்
களிப்பிலே கைகளைக் கொட்டிநின் றார்மனக்
கதவம் திறந்தொருப் பட்டுநின்றார்!

''பட்டி தொட்டியெலாம் பெய்தமழை யொருப்
பட்டுச்சிற் றாறுக ளாய்வரினும் - அவை
தொட்டுக் கலப்பது ஆழ்கட லேயந்தத்
தோற்றமே பல்மத மும்மிறையும்; - இதை
விட்டுக் கிணற்றுத் தவளைக ளாய்மக்கள்''
வீண்செருக் குற்றிடல் வேண்டுவதோ? - இதை
நட்டு அவர்உளம் இந்துப் பெருநெறி
நாடும் பிரமத்தை நாட்டிவைத்தார்.

காட்டிய தும்மவர் கண்திறந் தார்உளக்
கட்டறுத் தல்பர மென்றறிந்தார் - கீழை
நாட்டவ ரின்மதப் பேறுகண் டாரதை
நாடுவதில் தனி வீறுகொண்டார் - அருள்
தேட்டமிதுஎத னால்புகல்வீ ரந்தச்
சிக்காக்கோ பேருரைச் சீர்மையன்றோ! - நமை
ஆட்டிவைத் தான்விவே கானந்த னந்தநூற்
றாண்டுகண் டோமத னாலுயர்ந்தோம்.

''உயர்ச்சியும் தாழ்ச்சியும் நம்மனத்தேஅந்த
உண்மையின் தத்துவம் இந்துநெறி'' - ''எந்தப்
பெயர்ச்சியும் நம்மைத் தொடுவதில் லையுண்மைப்
பேறுபெற் றால்''என்ப திந்துநெறி - அந்த
முயற்சியில் எம்மை இறக்கிய சிக்காக்கோ
மூதுரைப் பேறுநூற் றாண்டுவிழா! - அந்த
அயர்ச்சியே யில்லா முயற்சியி லூக்கிய
அண்ணலை வாழ்த்தி அகமகிழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தரின் சமூகவியற் சிந்தனைகள்

**மா. வேதநாதன்** எம். ஏ.
முதுநிலை விரிவுரையாளர்,
இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**அறிமுகம்**

சுவாமி விவேகானந்தர், விசுவநாதரும் புவனேஸ்வரியம்மையும் செய்த தவம் என்னும் பெரிய வித்துட் தங்கி சிவத்தின் திருவருளினால் 1863ஆம் ஆண்டு தை மாதம் பன்னிரண்டாம் திகதி திங்கட்கிழமை கல்கத்தா நகரில் திரு அவதாரம் செய்தார். காசி வீரேசுவரசிவனின் கருணையினால் உதித்த குழந்தைக்குப் பெற்றோர் வீரேஸ்வரன் என்று பெயரிட்டனர் அவர்கள் நரேந்திரநாதன் என்ற நாமத்தையும் அவருக்குச் செல்லமாகச் சூட்டி மகிழ்ந்தனர்.

விவேகானந்தர் என்ற பெயரை அவர் பெறும்வரையும் நரேந்திரன், நரன் என்ற பெயர்களினால் அவர் அழைக்கப்பட்டார். பாலப்பருவத்தில் ஸ்ரீராமனையும் சீதையையும் வணங்கி வந்த விவேகானந்தர் சிறுவயது முதல் தாயின் சொற்படி, சிவபெருமானின் திருவுருவத்தை வைத்து வழிபடுவதும் தியானிப்பதுமாக விளங்கினார்.

பாரதியாரைப் போன்று முப்பத்தொன்பது ஆண்டுகள் இம்மண்ணுலகில் வாழ்ந்த சுவாமி விவேகானந்தர் இந்து மதத்தின் உயர்வை உலகறியச் செய்த உத்தமராக வாழும் இந்து மதத்தை வாழ்ந்துகாட்டியவராக - வேதாந்தியாக - சீர்திருத்தவாதியாக - தீர்க்கதரிசியாக - தாய்நாட்டை நேசித்த தேசபத்தராக - பொதுநலத் தொண்டராக விளங்கினார்.

**சுவாமி விவேகானந்தர் வாழ்ந்த காலச் சூழ்நிலை**

சுவாமி விவேகானந்தர் வாழ்ந்த காலச் சூழ்நிலையினை விளங்கிக்கொண்டால் தான் அவரின் சமூகவியற் சிந்தனைகளை புரிந்து கொள்வது இலகுவானதாக இருக்கும். சுவாமி விவேகானந்தர் வாழ்ந்த பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்து சமுதாயமானது பல வழிகளிலும் நிலை தளர்ந்திருந்தது. இந்து சமுதாயத்தில் காணப்பட்ட மூடக் கொள்கைகள் - அர்த்தமற்ற சடங்குகள் என்பவற்றைக் களைந்தெறிந்துவிட்டு பகுத்தறிவும் - புரிந்துணர்வும் நிரம்பப்பெற்ற புதிய இந்து சமுதாயமொன்றை உருவாக்கவேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது.

சதி என்ற உடன்கட்டை ஏறும் வழக்கம் - சாதிப்பாகுபாடு - தீண்டாமை என்ற தீராநோய் - விதவைகள் மறுமணம் செய்ய முடியாத பரிதாபநிலை - பலதாரமணம் - பாலிய விவாகம் - பெண் அடிமை - எங்கும் ஏழ்மை என இந்து சமுதாயம் சீர்குலைந்து காணப்பட்டது.

இப்படியான இக்கட்டான ஒரு காலக் கட்டத்தில் வங்காளத்தில் தோன்றிய ராஜா ராம் மோகன்ராய் (1774-1833), பஞ்சாப்பில் தோன்றிய சுவாமி தயானந்த சரஸ்வதி (1824 - 1883) என்ற சீர்திருத்தவாதிகள் முறையே பிரமசமாஜம் (1828), ஆரிய சமாஜம் (1875) என்ற அமைப்புக்களை ஏற்படுத்தி இந்து சமய சமூகப்பணிகள் புரிந்தனர். இக்காலத்தில் வங்காளத்தில் வாழ்ந்த இராமகிருஷ்ண பரமஹம்சர் (1836-1886) என்ற மகாஞானியின் வாக்கும் வாழ்க்கையும் இந்து சமுதாய மேம்பாட்டைப் பற்றியதாகவே இருந்தது. இத்தகைய சீர்திருத்தவாதிகளும் - தீர்க்கதரிசிகளும் - ஞானிகளும் தோன்றிய ஒரு காலகட்டத்தில்தான் சுவாமி விவேகானந்தரின் (1863-1902) அவதாரம் இம்மண்ணுலகில் ஏற்பட்டது.

**பிரமசமாஜத் தொடர்பும் ஸ்ரீராமகிருஷ்ணரின் சமூக நோக்கும்**

ஆன்மிக ஆற்றல் வாய்ந்த சுவாமி விவேகானந்தரின் உள்ளத்தில் உயரிய சமூகவியற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைகள் ஏற்படுவதற்கு அவர் வாழ்ந்த காலச் சூழ்நிலை மட்டுமன்றி பிரமசமாஜத்துடன் அவர் கொண்டிருந்த தொடர்பும், அவரின் ஞானகுருவாகிய ஸ்ரீராமகிருஷ்ணரின் பரந்த சமூக நோக்கும் பிரதான காரணங்களாகும். அனைத்து இந்திய முக்கியத்துவம் பெற்றுப் பேரியக்கமாகப் பரவிய பிரமசமாஜத்தினுடைய சமய சமுதாய சீர்திருத்தம் பற்றிய சிந்தனைகள் சுவாமி விவேகானந்தரைப் பெரிதும் கவர்ந்தன. அதனால் அவர் பிரமசமாஜத் தொண்டரானார். அவர் தொண்டாற்றிய பிரமசமாஜத்தினரின் சமுதாய சீர்திருத்த சிந்தனைகள் சுவாமி விவேகானந்தரின் சமூகவியற் சிந்தனைகளுக்கு வித்திட்டிருக்க வேண்டும் எனலாம்.

சுவாமி விவேகானந்தரின் ஆன்மிகக் குருவாக விளங்கிய ஸ்ரீராமகிருஷ்ணரின் ஆன்மிகம் கலந்த பொதுநல நோக்குடைய அமுத மொழிகளும் சுவாமி விவேகானந்தருக்கு உரிய சமூகவியற் சிந்தனை ஏற்படுத்துவதற்கும், அதனை வளர்த்தெடுப்பதற்கும் உரிய ஆன்மிக பலத்தையளித்தது. மனிதகுலம் முழுவதற்கும் மகத்தான சேவை செய்வதற்காகவே சுவாமி விவேகானந்தர் அவதரித்துள்ளார் என்று கூறிய ஸ்ரீராமகிருஷ்ணர், தனக்குச் சமாதி அனுபவம் அளிக்கவேண்டுமென சுவாமி விவேகானந்தர் அவரிடம் கேட்டபோது பின்வருமாறு கூறியுள்ளார்.

> ''உனக்கு வெட்கமாக இல்லையா? இவ்வளவு அற்பமான விஷயத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறாயே நீ பெரிய ஆலவிருட்சம் போலிருப்பாய். ஆயிரக்கணக்கானவர்களுக்கு நிழலளிப்பாய் என்று நான் நினைத்தேன் நீயோ உன்னுடைய சுயமோட்சத்தை மட்டுமே நாடுகிறாய்''

ஸ்ரீராமகிருஷ்ணரின் அவ்வமுதமொழியானது அகிலத்திலுள்ள அனைவருக்கும் சேவை செய்வதற்காகவே, தான் பிறந்திருக்கின்றேன் என்ற எண்ணத்தை சுவாமி விவேகானந்தருக்கு ஏற்படுத்தியது அத்துடன் தனது குருநாதரின் உயரிய நோக்கும் இதுவே என்பதையும் உணர்த்தியது.

**தாய்நாட்டுப் பற்று**

சுவாமி விவேகானந்தர் தாய்நாட்டின் மீது அளவற்ற அன்புடையவராக விளங்கினார். நாட்டு மக்களை அடிமைத்தனம் என்ற உறக்கத்திலிருந்து தட்டி எழுப்பி தாய்நாட்டின் முன்னேற்றத்திற்குப் பணிபுரியும்படி வீர முழக்கம் செய்தவர் விவேகானந்தர். இந்தியாவில் தேசிய உணர்வை எழுப்பி அந்நாட்டின் சுதந்திரத்தின் விடிவெள்ளியாக விவேகானந்தர் விளங்கினார் எனலாம். அவர் தனது தாய்நாட்டின் மீது இருந்த அளவற்ற அன்பை

> ''நமது தாயின் முன்னே எவரும் எதிர்த்து நிற்க இயலாது. இனிமேல் அவள் என்றும் உறங்கப் போவதில்லை. புற உலக சக்திகள் எவையும் அவள் முன்னேற்றத்தை இனித்தடுக்க முடியாது... நாம் முதலில் ஆராதிக்க வேண்டிய தெய்வங்கள் எமது தேசமக்களே. என்னுடைய தேசமக்களை உயர்த்துவதற்காக ஆயிரம் முறை வேண்டுமானாலும் நான் நரகத்திற்குச் செல்லத்தயார்''

என்று குறிப்பிட்டார். அவர் தனது தேசத்தையும்-தேசமக்களையும் நன்கு நேசித்தவராக விளங்கினார் என்பதை இது புலப்படுத்துகின்றது.

**இளைஞர்களின் பலம்**

தேசம் சுதந்திரம் பெறவேண்டுமானால் இளைஞர்கள் எல்லோரும் பலம் பொருந்தியவர்களாக விளங்கவேண்டும் என விவேகானந்தர் விரும்பினார். இது பற்றி அவர்

> 'நமது இளைஞர்கள் முதலில் பலம் பெறவேண்டும். சமய வளர்ச்சி பின்னர் தானே ஏற்படும். என் வாலிப நண்பர்களே! உங்களுக்கு பகவத்கீதையை விட விளையாட்டு சுவர்க்கத்திற்கு சுருக்குவழியாகும். உங்கள் தசைநார்களும்-புஜங்களும் இன்னும் சிறிது வலிமைபெறுங்கால் கீதையை இன்னும் நன்றாய் அறிந்துகொள்வீர்கள்.''

என்றார். இத்தகைய சிந்தனைகள் தாய்நாட்டின்மீது அவர் கொண்டிருந்த அளவற்ற அன்பால் எழுந்தவை எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கல்விச் சிந்தனைகள்

சிறந்த கல்விச் சிந்தனைகள் எந்நாட்டில் இருக்கின்றதோ அந்த நாடே ஆரோக்கியமுடையதாக விளங்கும் என விவேகானந்தர் எண்ணினார்.

தொழிற்கல்வியினால் நன்மையுண்டு என விளம்பிய விவேகானந்தர் ஒழுக்கமளிப்பது - மனோவலிமை தருவது - புத்தியை விசாலிக்கச் செய்வது - ஒருவனைத் தன் வலிமை கொண்டு நிற்கச் செய்வது ஆகிய கல்வியே நமக்கு வேண்டும் என இயம்பினார். மனிதத் தன்மை அளிப்பதே கல்வியின் இலட்சியமாய் இருத்தல் வேண்டும். பண்டைக்காலத்துக் குருகுலங்கள் போன்ற கல்வி ஸ்தாபனங்கள் தேவை என்றார். தாய்மொழிக் கல்வியை வற்புறுத்திய விவேகானந்தர் ஆங்கில மொழியையும் மேனாட்டு பௌதிக சாஸ்திரத்தையும் கற்கவேண்டும் எனவும் உரைத்தார். கூடியவரையில் தேசீய வழிகளில் தேசியமுறைகளிலேயே கல்வியளித்தல் வேண்டும் என்ற நோக்குடன் இவரது கல்விச் சிந்தனைகள் விளங்கின. இவரது கல்விச் சிந்தனைகள் ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்டனவாக விளங்கின எனலாம்.

### செயல்முறை வேதாந்தம்

விவேகானந்தரின் சமூகவியல் சிந்தனையை அவர் வற்புறுத்திய செயல்முறை வேதாந்தக் கொள்கை விளக்கி நிற்கின்றது. விவேகானந்தர் மனித சமுதாயத்தின்மீது கொண்டிருந்த எல்லையற்ற அன்பை அவருடைய செயல்முறை வேதாந்தம் என்ற நோக்கு தெளிவாக்குகின்றது.

''நீ அதுவாக இருக்கிறாய்'' என்று பொருள்படும் ''தத் - த்வம் - அஸி'' என்ற வேதாந்த மகாவாக்கியத்திற்கு ''ஒவ்வொரு ஜீவாத்மாவிடமும் தெய்வத்தன்மை பொருந்தியுள்ளது'' என்று எடுத்துக்கூறி, இதுதான் வேதாந்தத்தின் அடிப்படை என்பதை அகிலத்திற்கு அறிவித்தவர் விவேகானந்தர். செயல்முறை வேதாந்தத்தில் கண்ணும் கருத்துமாக விளங்கிய விவேகானந்தரது தன்னலமற்ற சமூக சேவை என்ற கண்ணோட்டம் படிப்படியாக அனைவருக்கும் ஒன்றாகக் கிடைக்கும் சர்வமுக்தி என்ற கோட்பாட்டில் சாய்வதைக் காணலாம்.

### மக்கள் சேவையே மகேசன் சேவை

மக்கள் சேவையே மகேசன் சேவை என்பது சுவாமி விவேகானந்தரின் தெளிந்த சமூகவியற் சித்தாந்தமாகும். சுவாமி விவேகானந்தர் மக்களிடம் கொண்டிருந்த எல்லையற்ற அன்பு அவருடைய செயல்முறை வேதாந்தம் என்ற கருத்தின் மூலம் வெளிப்படுகின்றது. செயல்முறை வேதாந்தம் என்ற அவரது கோட்பாடு தெய்வத்தை வழிபடுவதற்குரிய சிறந்த சின்னம் மனிதனே என்பதை உணர்த்தி நின்றது. கோயில்களில் தெய்வத்தை வழிபடுவதையும் - பிரார்த்தனை செய்வதையும் விவேகானந்தர் ஏற்றுக்கொண்டாலும் மக்களை இறைவனாகக் கருதி அவர்களுக்கு சேவை செய்வதே முக்கியம் என வலியுறுத்தினார். இதுபற்றி அவர் குறிப்பிடுகையில்

> ''கடவுள் ஒவ்வொரு ஜீவனிடத்தும் வியாபகமாக இருக்கின்றார். அதைவிட வேறு கடவுள் இல்லை. மக்களுக்குச் சேவை செய்தவன் கடவுளுக்குச் சேவை செய்தவனாகிறான். எவ்வளவோ தவத்தின் பின் நான் இந்த ஓர் உண்மையை உணர்ந்தேன். இன்றுநான் சொல்லியதை உன் இதயத்திலே எழுதிவை''

என்றார். இந்த சிந்தனையை,

> ''படமாடக் கோயில் பகவர்க்கொன்றீயின் நடமாடங் கோயில் நம்பர்க் கங்காகா நடமாடுங் கோயில் நம்பர்க் கொன்றீயில் படமாடக்கோயிற் பகவர்க்கதாமே''

என்ற திருமந்திரப் பாடலிலும் அறிகின்றோம். அடியார்க்கு அளிப்பதே இறைவனைச் சென்று சேரும் என்ற சிந்தனை இந்து சமுதாயத்தின் பொதுவான சமூக சிந்தனையாக விளக்குவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### ஜீவசேவையே சிவபூசை

சிறந்த சிவ வழிபாடு என்பது ஒரு சீவனுக்குச் சேவை செய்வதே என்று விவேகானந்தர் விளம்புகின்றார். இதனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எவன் ஒருவன் ஏழைகளினும் பலவீனமானவர்களிலும் நோய்வாய்ப்பட்டவர்களிலும் சிவனைக் காண்கின்றானோ அவன் தான் உண்மையில் சிவனை வழிபடுகின்றான். ஆலய விக்கிரகத்தில் மட்டுமே சிவன் இருக்கின்றார் என்பவர்கள் வழிபாட்டின் தொடக்க நிலையிலேயே இருக்கின்றனர். எவன் ஒரு ஏழையினுடைய சாதி, மதம் இனம் என்ற பேதங்கள் எதனையும் கருத்திற் கொள்ளாமல் அவனைச் சிவனாகக் கண்டு அவனுக்குத் தொண்டும் - உதவியும் புரிகின்றானோ அவன்தான் உண்மையில் சிவனது அனுக்கிரகத்தைப் பெறுவான்''

என்பதை மிகவும் ஆணித்தரமாக விவேகானந்தர் கூறியுள்ளார். இவ்வாறு ஜீவ சேவையே சிவபூசை என்பது விவேகானந்தரின் சமூகவியற்கொள்கை எனலாம். இந்த மனிதநேய உணர்வால் உந்தப்பெற்ற சுவாமி விவேகானந்தர் மேலும் கூறுகையில்

''வயிற்றுக்கடவுள் பூசையே இப்போது முதன்மையான தேவையாகும். வயிற்றுக்கடவுளை முதலில் திருப்தி செய்தாலன்றி உங்கள் சமய உபதேசங்களுக்கு யாரும் செவிகொடார். முதலில் இந்தக் கொடிய பட்டினியை நீக்குங்கள்'' என்றார்.

இச்சிந்தனையானது 'வயிற்றுக்குச்சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' என்ற பாரதியின் சிந்தனையுடன் ஒப்பு நோக்குதற்குரியது. இன்றும் இந்து சமயத்தை வளர்க்க விரும்புகின்றவர்கள் சிந்திக்க வேண்டிய ஒன்றாகிறது.

சாதி

சுவாமி விவேகானந்தர் சாதி பற்றியும்- சாதிப் பிரச்சனை பற்றியும் - அப்பிரச்சனையைத் தீர்க்கும் வழிவகைகள் பற்றியும் பல இடங்களில் பேசியும் - எழுதியும் உள்ளார். 'சாதி' பற்றி அவர் குறிப்பிடுகையில்

''சாதி என்பது ஒரு சமூக ஏற்பாடாகும்... சாதி ஏற்பாடு வேதாந்த மதத்திற்கு விரோதமானது. சமயத்துறையில் சாதி என்பது கிடையாது. மிக உயர்ந்த சாதியைச் சேர்ந்தவனும், மிகத் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவனும் இந்த நாட்டில் சந்நியாசியாகலாம். தற்கால சாதி வேற்றுமையானது இந்து சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு ஒரு தடைக்கல்லாகும். அது வாழ்வைக் குறுக்குகிறது.''

என்கிறார். சாதிப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான வழிபற்றிக் கூறுகையில் யாரையும் கீழே கொண்டுவராமல் கல்வி வழங்குவதன் மூலம் எல்லோரையும் மேலே தூக்கிவிடவேண்டும் என்கிறார். இதனை அவர்,

''சாதிப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான வழி மேலே உள்ளவர்களைக் கீழே இழுப்பதன்று. கீழே உள்ளவர்களை மேலுள்ளவர்களின் நிலைக்கு உயர்த்துவதேயாகும். நமது இலட்சியத்தில் மேல்படியில் பிராமணன். கீழ்ப்படியில் சண்டாளன். சண்டாளனைப் பிராமணனுடைய நிலைக்கு உயர்த்துவதே நமது வேலை. பிராமணனுடைய மகன் பிராமணன் ஆவது பெரிதும் சாத்தியமாயினும், பிராமணனுடைய மகன் ஒவ்வொருவனும் பிராமணனாகவே இருத்தல்வேண்டும். என்பது கட்டாயமில்லை. அவன் பிராமணனாகாமலும் போதல் கூடும்... பிராமண சாதியும் பிரம்மண்ய குணங்களும் முற்றும் வேறானவை. தாழ்ந்தோராகக் கருதப்படும் அனைவருக்கும் கல்வியும் - பயிற்சியும் கொடுப்பதன் மூலம் சாதிச் சமத்துவம் ஏற்படும்''

எனக் கூறியுள்ளார். இவ்வாறு சாதி பற்றி அவரின் சமூகவியல் நோக்கு காணப்படுகின்றது. மேலும் சாதியால் வந்த பெருங்கேடு தீண்டாமை என்பதாகும். இதற்குச் சாவுமணி அடிக்கவேண்டுமெனக் குரல் கொடுத்தவர் சுவாமி விவேகானந்தர்.

''தீண்டாமையன்றோ எங்கும் திருட்டுத்தனம் செய்கிறது தீண்டாமை, தீண்டாதவன் என்ற சொற்களைக் கேட்கும் போது என் னுயிர் போய்விடும் போலிருக்கிறதே சென்னை இராஜதானியில் பறையரென்ற பாமர வகுப்பினர் மிகக் கொடுமையாக நடத்தப்படுவதைக் கண்டு என்னுள்ளம் பதைத்தது. அவர்களில் எத்தனை பேர் உயர்ந்த வகுப்பினரின் கொடுமையைப் பொறுக்க மாட்டாமல் மதம் மாறி விட்டார்கள். இதனால் நமது சமயமும் - சமுதாயமும் பலக்குறைவடைந்து வருகின்றது. தீண்டாதவன் என்ற வார்த்தையைப் பிறர் சொல்ல நீங்கள் கேட்கும்போது ஸ்ரீராமகிருஷ்ணருடைய நாமத்தை நினையுங்கள். நான் சகலத்திலும் சர்வ லோக சரண்யனான நாராயணனை தரிசிக்கின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றேன் அதனால் உயர்வு தாழ்வு இல்லை. தீண்டாமை என்னும் மாயையை விலக்க உங்கள் முழுப்பலத்துடன் முன்வாருங்கள்''

இத்தகைய சமூகவியற் சிந்தனைகள் இந்து சமுதாய உயர்வுக்கு உதவும் என்பதில் ஐயமில்லை.

**பாமர மக்களின் முன்னேற்றம்**

பாமர மக்களின் முன்னேற்றத்திற்காக ஏழைகளின் ஏற்றத்திற்காக செயற்படுதலே முதல் வேலை என்பது விவேகானந்தருடைய கொள்கையாக இருந்தது. வேதாந்த கேசரியாக - வேதாந்த தத்துவஞானியாக விளங்கிய வீரத்துறவி விவேகானந்தர் - ஓரிடத்தில்

''நான் தத்துவ ஞானியல்லேன். ஆத்மஞானியுமல்லேன். நான் ஏழை. ஏழைகளை நேசிக்கின்றேன்''

என்றார்.

''எவனுடைய இதயம் ஏழைகளுக்காக இரத்தம் வடிக்கின்றதோ அவனையே நான் மகாத்மா என்பேன். மற்றவர்கள் துராத்மாக்களேயாவர்''

என்று கூறினார். இந்த நாட்டின் முதுகெலும்பு போன்ற ஏழைமக்களைப் பற்றி எண்ணுவார் யாருமிலர் என்று ஏங்கினார். நமது நாட்டு ஏழை மக்கள் உண்ண உணவின்றிப் பட்டினியாயிருப்பதைக் காணும் போது பூஜை முதலிய கிரியைகளையும் - கல்வியையும் எடுத்தெறிந்துவிட்டு ஊர் ஊராகச் சென்று தான் பெற்றுள்ள ஆன்மிக ஆற்றலினால் பணக்காரருடைய மனதைத் திருப்பி பணம் திரட்டி ஏழைகளுக்குத் தொண்டு புரிவதில் வாழ்நாள் முழுவதையும் கழிக்கவேண்டுமென்ற எண்ணம் தனக்கு உதித்ததாக உரைத்தார். இதனை,

''ஆண்டவனைத் தேடி நீங்கள் எங்கே போகிறீர்கள்? ஏழைகள் - துன்பப்பட்டவர்கள்-பலவீனர்கள் இவர்கள் எல்லோரும் அத்தனை தெய்வ வடிவங்களல்லவா? ஏன் முதலில் இவர்களை ஆராதிக்கக்கூடாது. கங்கைக் கரையில் கிணறு வெட்டப் போதல் உண்டா? இந்த ஏழைகளையே உங்கள் கடவுளாகக் கொள்ளுங்கள். அவர்களைப் பற்றிச் சிந்தியுங்கள். அவர்களுக்கு ஊழியம் புரியுங்கள். அவர்களுக்காக இடைவிடாது பிரார்த்தனை செய்யுங்கள். அப்போது ஆண்டவன் உங்களுக்கு வழிகாட்டுவார்''

என்று குறிப்பிட்டுள்ளார்.

''இந்துக்களிடம் அனுதாபம் இன்மையாலேயே சென்னையிலுள்ள ஆயிரக்கணக்கான தாழ்த்தப்பட்டோர் மதம் மாறுகின்றார்கள். இது பசிக் கொடுமையால் மாத்திரம் ஏற்பட்டதன்று, இந்துக்களுடைய உள்ளத்திலுள்ள இரக்கமின்மையாலும் ஏற்பட்டதென இடித்துரைத்தார். பாமர ஜனங்களைக் கைதூக்கிவிட வேண்டுமென்ற எண்ணம் சிறிதும் இல்லாமல் 'கடவுள் அன்புமயமானவர் என்றும், 'அன்பே சிவம்' என்றும் பேசுவதால் எந்தப்பிரயோசனமும் வரப்போவதில்லை''

என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்தார். இந்த நோக்கில் வேதாந்தியான விவேகானந்தர்,

''இந்த ஒரு பிறவியையாவது பிறருடைய தொண்டுக்காகப் பயன்படுத்தல் கூடாதா? நீ இந்தப் பிறவியை பிறருடைய சேவைக்குப் பயன்படுத்துவாயெனின் நீ இவ்விடம் வந்தது வீண்போகவில்லை என நான் அறிவேன். இனி வருகின்ற பிறவிகளில் வேதாந்தம் முதலிய தத்துவ சாத்திரங்களை வாசிக்கலாமே''

என்று கூறியுள்ளமை அவர் உண்மையில் மக்களை வாழ்விக்க வந்த மகாத்மாவே என்பதைப் புலப்படுத்துகின்றது.

**பெண்களின் முன்னேற்றம்**

சுவாமி விவேகானந்தர் இந்துப் பெண்களின் முன்னேற்றத்தில் மிகவும் அக்கறை கொண்டவராக விளங்கினார். விதவைகள் மீண்டும் திருமணம் செய்யலாம் என்றார். வயது வந்த பின்னரே திருமணம் செய்ய வேண்டுமென வற்புறுத்தினார்.

நமது பெண்கள் திக்கற்றவர்களாகவும் - பிறரை நம்பி வாழ்பவராகவும் நீண்டகாலமாகப் பயிற்சி செய்யப்பட்டு வந்திருக்கின்றனர் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தூய் நடத்தையும் - தொண்டில் விருப்பமும் - அன்பும் - தயாளமும் - திருப்தியும் - பக்தியும் ஒருங்கே வாய்ந்த பெண்களை உலகில் வேறெந்த நாட்டிலும் நான் காண்பதற்கில்லை'' என்று கூறினார். இந்நாட்டில் பெண்கள் சம்பந்தமான பல முக்கிய பிரச்சனைகள் உண்டென்பது உண்மையே. ஆனால் கல்வி என்னும் மந்திரத்தினால் தீர்த்துவைக்க முடியாதது அவற்றில் எதுவும் இல்லை. பெண்களைப்பற்றி அவர் கூறுமிடத்து

> ''பெண்களுக்குக் கல்வியளியுங்கள். பின்னர் அவர்கள் போக்கில் விட்டு விடுங்கள். தங்களுக்கு என்னென்ன சீர்திருத்தங்கள் வேண்டுமென்று அவர்களே சொல்வார்கள். பெண்களைப் பொறுத்த விடயத்தில் தீர்ப்புச் சொல்ல உங்களுக்கு என்ன அதிகாரம்? பெண்ணின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு நீ யார்? ஒவ்வொருவிதவையையும்-பெண்ணையும்அடக்கி ஆள்வதற்கு நீ என்ன அவர்களைப் படைத்த ஆண்டவனா? விலகி நில். அவர்கள் தங்கள் பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்வார்கள்''

இவ்வாறு கூறி பெண்ணின் பெருமையினையும் - அவளின் வீர சுதந்திரத்தையும் தட்டி எழுப்பியவர் சுவாமி விவேகானந்தர்.

### சந்நியாசிகள்

சமூகத்திற்குத் தொண்டு செய்யவே சந்நியாசிகள் தோன்றுகிறார்கள் என்பது விவேகானந்தருடைய கொள்கையாகும்.

> ''சந்நியாசம் என்ற துறவு வாழ்க்கை நிலையில் 'சந்நியாசி' என்பவன் தனது காலத்தைத் தியானத்தில் கழிக்க வேண்டுமென்றும் - உன்னத இலட்சியமான வீடுபேற்றினை அடைவதற்காக உலகியல் காரியங்களை விட்டு விட்டு வாழ்க்கையின் கடைசிப் பகுதிக்கு அவன் தனிமையாகவே நடந்துசெல்லவேண்டும் என்று கூறப்படுகின்றது''

இதனை விவேகானந்தர் முழுமையாக ஏற்கவில்லை.

மடங்களில் முடங்கி என்றும் தியான நிலையிலிருப்பதும் - சங்கங்களில் எப்போதும் சமாதி நிலையில் வீற்றிருப்பதும் தான் சந்நியாசியின் இலக்கணம் என்பதை வீரத்துறவி விவேகானந்தர் முற்றாக ஏற்றுக்கொள்ள வில்லை.

ஒரு சந்நியாசி பிறப்பதன் நோக்கம் பற்றி மிகத் தெளிவாக பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> ''பலருடைய நன்மைக்காகவும்-பலருடைய மகிழ்ச்சிக்காகவும் சந்நியாசி இவ்வுலகிலே பிறக்கிறான். சந்நியாசம் பெற்றுக்கொண்டு இந்த உண்மையை மறந்து போகின்ற துறவியினுடைய வாழ்க்கை பயனற்றதாகின்றது. பிறர் வாழும் பொருட்டு தனது உயிரைக் கொடுக்கவும் மக்களுடைய துயரை அகற்றவும் - கைம்பெண்ணின் கண்ணீரைத் துடைக்கவும் - குழந்தையை இழந்த தாயினுடைய மனதிற்கு ஆறுதல் வழங்கவும் - அறிவில்லாத பொதுமக்களுக்கு அறிவினை வழங்கி வாழ்க்கையை நடத்தச் செய்யவுமே .. சந்நியாசி இவ்வுலகிலே பிறக்கிறான்''

என்றார். முற்றும் துறந்த துறவிகள்கூட சமூக நலத்திற்கு உதவுதற்கே பிறந்தவர்கள் என்ற உயரிய இந்து சிந்தனையை மேற்படி வரிகள் புலப்படுத்தி நிற்கின்றன.

### விவேகானந்தரின் நோக்கில் அன்னதானப் பணியின் அவசியம்

சமுதாயத்தை நேசித்த சுவாமி விவேகானந்தர் தானங்களுள் அன்னதானமே அப்போதய தேவை என்பதை நன்குணர்ந்தார். அல்லலுறும் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு அன்னமளிப்பதும் துன்பப்பட்டவர்களுக்கு உணவு-உடை-உறையுள் கொடுப்பதும் இராமகிருஷ்ண மடத்தொண்டர்களின் முதற்கடமையாகுமென விவேகானந்தர் விளம்பினார். பிறருக்காகப் பாடுபடும் பழக்கமும், மக்களின் துக்க நிவாரணத்திற்காக தமது வாழ்வை அர்ப்பணஞ் செய்யும் மனப்பான்மையும் அன்னதானம் செய்யும் தொண்டர்களுக்கே ஏற்படுமென்பது விவேகானந்தரது உறுதியான நம்பிக்கையாகும். எனது ஜன்ம பூமியில் ஒரு நாய்கூட பட்டினி கிடக்க நான் சகியேன் என்ற ஆன்மநேய உளப்பாங்கு விவேகானந்தரின் உள்ளத்தில் ஒலித்தவண்ணமே இருந்தது. இவர் அன்னசத்திரத்தின் அவசியத்தை விளக்கிக் கூறுகையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஸ்ரீராமகிருஷ்ணருடைய பெயரில் ஒரு அன்ன சத்திரம் அல்லது தரும சத்திரம் நிறுவப்பட வேண்டும். அங்கு ஏழைகளுக்கு அனுதினமும் இருவேளையும் அன்னமளிப்பதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்வதற்கு உத்தேசித்திருக்கின்றேன்... உற்சாகமுள்ள பிரம்மச்சாரிகளை இந்த அன்ன சத்திரத்தை நடத்தும்வண்ணம் பழக்கவேண்டும். அவர்கள் தாமே வீட்டுக்கு வீடு பிச்சை எடுத்தாகிலும் அதனை நடத்தக்கூடிய திறமை வாய்ந்தவர்களாக இருக்கவேண்டும். மடத்திலிருந்து அன்னசத்திரத்திற்கு எந்தவித உதவியும் அளிக்கப்படலாகாது. இப்படிப் பிரம்மச்சாரிகள் ஐந்தாண்டுகள் இவ்வன்னசத்திரத்தில் தொண்டாற்றிய பின்னரே அவர்கள் மடத்தின் கலை வளர்ச்சிச் சாலைக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். இவ்விதம் பத்துவருட உழைப்பிற்குப் பிறகு அவர்கள் மடத்து அதிகாரிகளின் அனுமதியின்பேரில், தமக்கு இஷ்டமிருந்தால், மடாதிபதிகளுக்கும் அவர்கள் தகுதியுடையவர்களே என்ற அபிப்பிராயம் ஏற்பட்டால் சந்நியாசிகளாக ஏற்கப்படுவார்கள்.... இச்சத்திரத்தில் இரண்டு மூன்று ஏழைகளோ அல்லது பிணியாளர்களோ வசிக்கவேண்டும். அவர்களுக்கு சுத்தமான படுக்கையும் தூய ஆடையும் அளிக்க வேண்டும். அவர்களை ஒரு வைத்தியர் வந்து பார்க்க ஏற்பாடு செய்யவேண்டும். சேவாஸ்ரமம் என்பது அன்னசத்திரத்தின் ஒரு பிரிவாகும்"

என்று குறிப்பிடுகின்றார். இராமகிருஷ்ண மடத்துறவிகளாக வருகின்றவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற அன்னதானப் பணியில் ஈடுபடுத்துதல் போன்ற முற்பயிற்சி முறைகள் சமூக நன்நோக்குடைய - ஆன்மநேயமுடைய ஆன்மிகத் தலைவர்கள் உலகில் உருவாக்கம் பெறுவதற்கு வழிவகுத்துள்ளதெனலாம்.

### விவேகானந்தரின் நோக்கில் வெளிநாட்டுத் தொடர்பு

சமுதாய முன்னேற்றத்திற்கு வெளிநாட்டுத் தொடர்பு முக்கியம் என விவேகானந்தர் வற்புறுத்தினார். மேனாட்டார் கலைகள் - பூத பௌதிக சாத்திரங்கள் என்பன மேனாட்டிலிருந்து நாம் கற்கவேண்டியவை. ஆனால் அவர்கள் சமயத்திற்கும் - பாரமார்த்திக ஞானத்திற்கும் நம்மிடம் வரவேண்டியவர்கள் என்றும் விவேகானந்தர் உரைத்தார். வெளி உலகுடன் தொடர்பின்றி நாம் உயிர் வாழ முடியாது. அப்படி வாழமுடியும் என்று எண்ணியது நமது மடமை. அதற்குரிய தண்டனையை ஓராயிரம் ஆண்டு அடிமை வாழ்வு வாழ்ந்து நாம் அனுபவித்துவிட்டோம். நாம் யாத்திரை செய்யவேண்டும். நாம் வெளிநாடு சென்று அந்நாடுகளில் சமூக வாழ்வு எவ்வாறு நடைபெறுகின்றதென்பதைப் பார்க்கவேண்டும் என்று கூறிய விவேகானந்தர் நாடு நலம் பெற நமக்கு வெளிநாட்டுத் தொடர்பு கட்டாயம் அவசியம் என்பதை வற்புறுத்தினார்.

### சமுதாய சேவையில் ஸ்ரீராமகிருஷ்ண சங்கமும் மடமும்

சமுதாயத்திற்குச் சேவை செய்யவேண்டுமென்ற சமூகவியற் சிந்தனைகளை வளர்த்தெடுப்பதற்குத் தனது குருவின் பெயரால் 'ஸ்ரீராமகிருஷ்ண சங்கமும் மடமும்' என்ற ஓர் அமைப்பு சுவாமி விவேகானந்தரால் ஏற்படுத்தப்பட்டது. 1893ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் பதினொராம் திகதி திங்கட்கிழமை காலை 10-00 மணிக்குத் தொடங்கிய சர்வமத சபை மாநாட்டில் வெற்றிகரமாகக் கலந்துவிட்டுத் திரும்பிய பின்னர் தனது தேசமக்களுக்குச் சேவை செய்வதற்கு பிறநாடுகளில் உள்ளது போன்ற அமைப்பு அவசியமானது என்ற ஆதங்கத்தினால் 1897ஆம் ஆண்டு வைகாசி மாதம் முதலாம் திகதி 'ஸ்ரீராமகிருஷ்ண சங்கம்' என்ற அமைப்பு சுவாமி விவேகானந்தரால் உருவாக்கம் பெற்றது. மனிதகுலத்தின் நன்மைக்காக ஸ்ரீராமகிருஷ்ணர் எந்த உண்மைகளை உபதேசம் செய்து, தமது வாழ்விலும் பரிபூரணமாக வாழ்ந்து காட்டினாரோ, அவற்றைப் பரப்புவதும், அந்த உண்மைகளை மக்கள் கடைப்பிடித்து லௌகிகத்திலும், மனநிலையிலும், ஆன்மீகத்திலும் முன்னேறுவதற்கு உதவுவதும் இச்சங்கத்தின் நோக்கமாகும். இந்த அமைப்பு 1898ஆம் ஆண்டு மார்கழி மாதம் ஒன்பதாம் திகதி முதன்முதல் கல்கத்தாவை நோக்கியிருக்கும் பேலூர் மடத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவுருவத்தையும் அவரது அஸ்திக்கலசத்தையும் வைத்து ஆரம்ப விழாவைக்கொண்டாடியது சமயப்பணியும், பொதுப்பணியும் இந்த அமைப்பின் அடிப்படைக் கொள்கை ஆகும். ஆரம்பகாலம் தொடக்கமாக இதன் பணிகள் விரிவடைந்துகொண்டே வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் மட்டுமன்றி இலங்கை, சிங்கப்பூர், பாகிஸ்தான், பீஜி, பர்மா, பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் உள்ள இராமகிருஷ்ண மிஷன்கள் சமய-சமுதாய சேவைகளைச் செவ்வனே செய்து வருகின்றன. 1952 - 1953 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின் பிரகாரம் பேலூர் தலைமை நிலையத்தையும் சேர்த்து டிசம்பர் 1954இல் மொத்தம் 40 பொதுப்பணி மன்றங்களும் 14 சமய, பொதுப்பணி மன்றங்களும் இருந்திருக்கின்றன என்பதும் எல்லாமாக 69 பொதுப்பணி மன்றங்களும் 65 சமயப்பணி மன்றங்களும் இருந்திருக்கின்றன என்பதும் தெரிய வருகின்றது. 1953ல் 16,530 நோயாளிகளுக்கு இடம் கொடுத்த 12 மருத்துவ நிலையங்களும் 21,76,940 நோயாளிகளுக்கு மருந்தளித்த 61 மருத்துவ சாலைகளும் இருந்தன. 2,601 மாணவர்களும், 233 மாணவியர்களும் 144 மாணவ விடுதிகளில் தங்கியிருந்தார்கள். 1558 மாணவர்களுக்குக் கல்வி அளித்த இரண்டு கல்லூரிகள் இருந்தன. இவை தவிர மருத்துவப் பெண்களையும், மகப்பேற்றுத் துறையில் பயிற்சிபெற்ற பெண்களையும் பயிற்றுவிக்க நான்கு நிலையங்கள் இருந்தன. ஆக எல்லா நிலையங்களிலும் சுமார் 24,000 மாணவர்களும் 7,100 மாணவியர்களும் பயின்றார்கள். ஸ்ரீராமகிருஷ்ண மிஷனின் 1990-1991 ஆம் ஆண்டுக்கான பொது அறிக்கையில் கீழ் வரும் சமூக சேவை விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

''1990ஆம் ஆண்டில் உலகிலுள்ள பதின்மூன்று நாடுகளில் நூற்றி முப்பது ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் கிளைகள் உள்ளன. இவற்றுள் இந்தியாவில் மட்டும் தொண்ணூற்றேழு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் கிளைகள் காணப்படுகின்றன. தொழாயிரத்துக்கும் மேற்பட்ட சந்நியாசிகளும், மற்றும் பல தொண்டர்களும் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் கிளைகளில் தொண்டு புரிந்து வருகின்றனர். மருத்துவ சேவைக்காக இரண்டரைக் கோடி அமெரிக்க டொலரும், கல்விச்சேவைக்காக ஏழு கோடி அமெரிக்க டொலரும், பின்தங்கிய கிராமிய நலச்சேவைக்காக ஏழு லட்சம் அமெரிக்க டொலரும் (1990இல்) செலவு செய்யப்பட்டுள்ளது. பதினான்கு வைத்தியசாலைகளை மிஷன் நடத்துகின்றது. இதில் உள்நோயாளிகளாக அறுபதினாயிரம் பேரும், வெளிநோயாளிகளாக இரண்டு கோடி மக்களும் சிகிச்சை பெற்றுள்ளனர். இதைவிட எண்பத்திநான்கு மருத்துவ நிலையங்களை வெளிநோயாளர்களுக்கு உதவும் பொருட்டு நடத்திவருகின்றது. இவற்றில் இரண்டரைக்கோடி மக்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். பின்தங்கிய கிராமங்களில் இருபத்திரண்டு நடமாடும் வைத்திய நிலையங்களை ஏற்படுத்தி ஒருகோடி மக்களுக்கு மருத்துவ சேவையாற்றியுள்ளனர். மிஷன் ஐந்து மருத்துவ தாதிமார் பயிற்சி நிலையங்களையும் நடத்தியது. அதில் ஐந்நூறு மருத்துவ தாதிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மிஷன் நடத்தும் எண்ணூறு பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் மாணவர்களுக்குக் கல்வி புகட்டப்பட்டுள்ளது''

இவ்வாறு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் தொண்டர்கள் மருத்துவ சேவை, கல்விச்சேவை, சமூகநலச் சேவை என்ற சமுதாய சேவைகளை வருடாவருடம் அதிக அளவில் செய்து வளர்ந்துகொண்டே வருவது மிகத்தெளிவாகின்றது. அகதிகளுக்கு அபயமளித்தல், பஞ்சம் வந்தபோது தஞ்சமளித்தல், பின்தங்கியோரை முன்னேற்றுதல் போன்ற நற்சேவைகளையும் நாடளாவிய ரீதியில் செய்து வருகின்றனர். மேலும் இயற்கையின் சீற்றம் காரணமாகவோ அல்லது மனிதர்களின் தவறுகளினாலோ துன்பங்கள் ஏற்படுமானால் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் தொண்டர்கள் அங்கு விரைந்துசென்று பணிபுரிந்து இடர்களைவது வழக்கமாகும்.

ஸ்ரீராமகிருஷ்ண மடத்தொண்டர்கள் தமது சமுதாய சேவைகளை பிரதிபலனைக் கருதியோ, மதமாற்றத்தை நோக்காகக் கொண்டோ செய்வதில்லை. இச்சமுதாய சேவைகளினூடாக ஆன்மிகத்துறையில் தாழ்ந்த நிலையிலிருக்கும் மக்களை ஆன்மிகத்தில் மேம்பட்ட நிலைக்கு உயர்த்தலாமென சுவாமி விவேகானந்தர் முற்றாக நம்பினார். இந்துவாயினும் சரி, கிறிஸ்தவராயினும் சரி, முகம்மதியராயினும் சரி எம் மதத்தைச் சேர்ந்தவராயினும் அவரை ஆன்மிகத்தில் உயர்த்துவதற்கு சமுதாய சேவையை அகிலத்திற்கு பரப்பியதில் சுவாமி விவேகானந்தர் வெற்றி அடைந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் ஸ்ரீராமகிருஷ்ண மிஷனின் நோக்கங்களை முதன் முதல் நல்லவகையில் முன்னெடுத்த ஈழத்தவருள் மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தரைக்குறிப்பிடலாம். இவர் யாழ்ப்பாணத்தில் இதற்கென ஓர் அமைப்பை ஏற்படுத்த முனைந்தபோதும் அது வெற்றியளிக்காமையினால் மட்டக்களப்பில் அவ்வமைப்பின் மூலம் அரும்பணி புரிந்துள்ளார். இவர் மட்டக்களப்பில் ஓர் சிறுவர் நிறைவாழ்வு இல்லத்தை நடத்தியதோடு 23 பாடசாலைகளையும் நடத்தினார். இலங்கையில் ஸ்ரீராமகிருஷ்ணர் பேரிலும், சுவாமி விவேகானந்தர் பேரிலும் பாடசாலைகள் அமைந்து விளங்குகின்றன. இக்கல்விக்கூடங்கள் யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, தம்பலகாமம், லுணுகலை, அம்பாறை ஆகிய மாவட்டங்கள் ஈறாகப் பரந்து காணப்படுகின்றன.

இலங்கையில் 1930ஆம் ஆண்டு ஸ்ரீராமகிருஷ்ண மிஷனின் தலைமைப்பீடம் கொழும்பில் அமைக்கப்பட்டது. ஆன்மிகப் பணியும் சமூகப்பணியும் செய்துவரும் இம்மிஷன் தனது பொன்விழாவை 1980ஆம் ஆண்டு மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. தற்போது இதன் தலைமைப் பொறுப்பை வகிக்கும் சுவாமி ஆத்மகனானந்தாஜி ஸ்ரீராமகிருஷ்ண மிஷனுக்குரிய நோக்கங்களை வளர்த்தெடுப்பதில் பெரும்பணிபுரிந்து வருகின்றார். மட்டக்களப்பிலும் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் சிறந்த பணியாற்றிவருகின்றது. யாழ்ப்பாணத்தில் சுவாமி சித்ரூபானந்தா அவர்கள் பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் மூலம் நற்பணிகள் புரிந்துவருகின்றார்.

திருநெல்வேலி இராமக்கிருஷ்ணாலய இயக்குனர் திரு. இ. ராஜா மகேந்திரசிங்கம் அவர்கள் ஸ்ரீராமகிருஷ்ணரதும் சுவாமி விவேகானந்தரதும் சமய சமுதாய சிந்தனைகளை மேம்படுத்துவதில் ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றார். இவ்வியக்குனரும் அவரது மனைவியும் தம்பதிகளாக இணைந்து இப்பணிகளைச் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

சுவாமி விவேகானந்தரின் சீடர்களில் இரு வகைப்பட்டனர் உள்ளனர். ஒருவகையினர் மணவாழ்க்கை எதுவுமின்றி ஆச்சிரம வாழ்வினை மேற்கொண்டு துறவு ஒழுக்கத்தில் ஒழுகுபவர்கள். மற்றொரு வகையினர் திருமணம் மேற்கொண்டு வாழ்வை நன்கு நெறிப்படுத்தி ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள் வழிநிற்பவர்கள். இந்த வகையினைச் சேர்ந்தவர்களுள் ஒருவராக திருநெல்வேலி இராமகிருஷ்ணாலய இயக்குனர் விளங்குகின்றார். இவர்கள் சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ பிரசங்க நூற்றாண்டு விழா மாநாட்டை 24-5-94 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கைலாசபதி கலை அரங்கத்திலும், 28 5-94 சனிக்கிழமை நல்லூர் இளம் கலைஞர் மன்ற மண்டபத்திலும் சிறப்பாகக் கொண்டாடினர். இவ்வகையில் பேலூரில் இருந்து யாழ்ப்பாணம் வரையிலும் சுவாமி விவேகானந்தரின் சமய சமூகவியற் சிந்தனைகள் இன்றும் சிறப்பாக வளர்த்தெடுக்கப்பட்டு வருவது குறிப்பிடற்பாலதாகும்.

ஆதரவற்றோர் தொகை அதிகரித்து - துன்பம் சூழ்ந்துள்ள யாழ்ப்பாணத்தில் காலம் தாழ்த்தாது உடனடியாக ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் கிளை ஒன்றை தலைமைப்பீடம் ஏற்படுத்துமானால் அது காலத்தினால் செய்த உதவியாக அமையும்.

1997 ஆம் ஆண்டு 'பேலூர் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும்போது சுவாமி விவேகானந்தர் 1897இல் இலங்கைக்கு வந்ததை நினைவு கூரும் நூற்றாண்டு விழாவும் இணைந்து இலங்கையில் நடைபெறும் என்பதில் இரட்டித்த மகிழ்வடைகின்றோம். எனவே ஸ்ரீராமகிருஷ்ண மிஷனின் உயர்மட்ட விழா ஒன்றை 1997 தை மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த தலைமைப்பீடம் சிந்திக்குமேயானால் அது அனைவருக்கும் பெருமைதரும் விடயம் எனலாம்.

'செத்துங் கொடை கொடுத்தான் சீதக்காதி' என்ற வள்ளல் போன்று சுவாமி விவேகானந்தர் தான் வாழும்போது மட்டுமன்றி மகா சமாதிக்குப் பின்னரும் மக்களுக்குச் சேவை செய்வதையே இலட்சியமாகக் கொண்டிருந்தாரென்பதை அவரே பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார். இது பற்றி அவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கிழிந்த ஆடையைக் களைவது போல் இந்த உடலை எறிந்துவிட்டு வெளிக்கிளம்புவது என்று எனக்குத் தோன்றக்கூடும் ஆனால் உடலுக்கு வெளியே சென்றாலும் நான் சேவை செய்வதை நிறுத்தமாட்டேன்"

என்று குறிப்பிட்டுள்ளார். இவரின் இக் கூற்று இன்று நிதர்சனமாக ஸ்ரீராமகிருஷ்ண மிஷன்கள் மூலம் செயற்படுத்தப்படுகின்றது.

இவ்வாறாக தான் வாழ்ந்த காலச் சூழ் நிலையைக் கருத்திற்கொண்டு தனது ஆன்மிகக் குருவின் அமுதமொழிகளைச் சிரமேற் கொண்டு இந்து சமுதாயத்தை மேம்படுத்த வேண்டுமென்ற உயரிய சமூகவியற் சிந்தனைகள் கொண்ட ஒரு சிறந்த சமூகவியலாளராக வாழ்ந்து காட்டியவர் வீரத்துறவி விவேகானந்தர் எனலாம்.

**உசாத்துணை நூல்கள்**

1. கணபதி, ரா., சுவாமி விவேகானந்தர் ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை, 1979.

2. ..................,அறிவுக்கனலே அருட்புனலே கலைமகள் வெளியீடு, சென்னை, 1965.

3. சுவாமி தபஸ்யானந்தர், ஸ்ரீராமகிருஷ்ண மடமும் சங்கமும், ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை 1980.

4. .........................., சுவாமி விவேகானந்தர் வாழ்க்கையும், செய்தியும், தமிழாக்கம்: திருமதி. மங்கையர்க்கரசி ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை, 1992.

5. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம், சுடர்கள் 1-16, ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை, 1986-1992.

6. சிகாகோ பிரசங்கம், சுவாமி விவேகானந்தர், ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை 1975.

அனைவரோடும் ஒத்துவாழ். நானே பெரியவன் என்ற அகம்பாவத்தை அறவே ஒழிப்பாய். பயனற்றவாதப் போர் பாவமாகும். அதில் ஈடுபடாதே. பாமர மனிதனைவிடச் சிறிது பண்புள்ள வார்த்தைகளைப் பேசத் தெரிவதால் நீங்கள் உங்களைப் பெரியவர்களாகக் கருதுகிறீர்கள். பண்பில் பெரியவர் நாம், அறிவில் பெரியவர் நாம் என்ற எண்ணம் என்று உங்களிடம் புகுகின்றதோ அன்றே நீங்கள் அழிந்து விடுவீர்கள். எல்லாத் தளைகளையும் விடப் பயங்கரமானது அறிவுச் செருக்கேயாகும்.

— ஸ்வாமி விவேகானந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி முகாமைத்துவத்திற்கு ஆத்மீக அணுகுமுறை

மா. செல்வராஜா
கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித் துறை
தேசிய கல்வி நிறுவகம், மகரகமை.

முகாமைத்துவத்தில் இன்று பலவகைக் கோட்பாடுகளும், அணுகுமுறைகளும் பிரயோகிக்கப்படுகின்றன. கைத்தொழிற் புரட்சிக் காலத்திலிருந்து முகாமைத்துவ அணுகுமுறைகளும் கோட்பாடுகளும் விருத்தியாக்கப்பட்டு வருவதனை முகாமைத்துவ வரலாற்றில் காணலாம். பீற்றர் ட்றக்கர் போன்ற முகாமைத்துவ நிபுணர்கள் இன்று ஒழுக்கம் சார்ந்த முகாமைத்துவத்தில் அதிக நாட்டம் காட்டுவதை அவதானிக்க முடிகின்றது. ஆசிய நாடுகளில் பல சமய கலாச்சார அம்சங்களை முகாமைத்துவத்தில் புகுத்தி வெற்றியடைந்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது. இந்தியாவில் வர்த்தக நிறுவனங்கள், தொழிற்சாலைகள், கம்பனிகள், கலாசாலைகள் ஆகியவற்றில் ஆத்மீக அணுகுமுறைகள் ஏற்கனவே புகுந்து வெற்றியைத்தர ஆரம்பித்துவிட்டன என்பதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன.

ஒரு நாடு தனது பாரம்பரியங்களையும், கலாச்சாரத்தையும் விட்டு வளர்ச்சி பெறமுடியாது. அதிலும் ஆசிய நாடுகள் கலாச்சாரத்தை, சமய அடிப்படைகளைப் புறக்கணித்து முன்னேற்றங்களைக் காணமுடியாது. ஏனெனில் சமயமும், கலாச்சாரமும் அவற்றின் ஆணிவேராகக் காணப்படுகின்றன. இன்னும் அழுத்தமாகக் கூறுவதானால் அவற்றின் தேசிய இரத்தத்தில் அவை இரண்டறக் கலந்துவிட்டதெனலாம். எனவே இந்நாடுகள் தமது முன்னேற்றத்தினைச் சமயம், கலாச்சாரம் என்பனவற்றின் அடிப்படையிலேயே காண முடியும்.

முகாமைத்துவத்தில் பல கோட்பாடுகள், அணுகுமுறைகள் தோற்றுவிக்கப்பட்டபோதும் அவற்றுட் சில பின்வந்த எழுத்தாளர்களால் விமர்சனத்துக்கு உட்பட்டு வந்திருப்பதையும் அவற்றின் முறைப்பாடுகளுக்கு ஏற்ப முகாமைத்துவ நிபுணர்கள், ஆய்வாளர்கள் ஆகியோரால் புதிய கோட்பாடுகளும் அணுகுமுறைகளும் தோற்றுவிக்கப்பட்டிருப்பதையும் காணலாம். பலவகையான கோட்பாடுகளும் அணுகுமுறைகளும் இன்று ஆத்மீக அடிப்படைகளை நோக்கியே சென்று கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. மேலைத்தேய முகாமைத்துவ எழுத்தாளர்கள் என்றாலும் சரி, கீழைத்தேய முகாமைத்துவ எழுத்தாளர்களானாலும் சரி இந்த வகையான போக்கினை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையில் பௌத்த மதத்தின் அடிப்படையிலான முகாமைத்துவக் கலாச்சாரத்தினை அல்லது அணுகுமுறையை உருவாக்குவதற்கும் முகாமைத்துவ ஆராய்ச்சியாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றார்கள். எதிர்காலத்தில் அவர்களது ஆய்வுகள் முகாமைத்துவச் செயற்பாடுகளில் பிரயோகிக்கப்படலாம். இறைக் கோட்பாட்டின் அடிப்படையில் தத்தம் மதங்களைச் சேர்ந்தவர்கள் தமது செயற்பாடுகளில் மதச்சார்பான அணுகுமுறைகளைத்தாமாகவே பிரயோகித்து வருகின்றார்கள் என்பதில் ஐயமில்லை. இருப்பினும் கல்வித்துறையில் இவ்வாறான ஆத்மீக அணுகுமுறையைப் பிரயோகிக்க அழுத்தம் கொடுப்பது பயனளிக்கும் என்பது இக்கட்டுரையாசிரியரால் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கும் கல்வி நிர்வாகிக்கும் அளித்து வரும் முகாமைத்துவப் பயிற்சிகளின் போது அவதானிக்க முடிந்தது. கடந்த இரு மாதங்களுக்குள் நூற்றுக்கு மேற்பட்ட அதிபர்களிடம் இவ்வாறான ஓர் அணுகுமுறையைக் கல்வி முகாமைத்துவத்தில் பிரயோகிப்பது பயனளிக்குமா என்று வினவியபோது அவர்கள் அவ்வாறான ஓர் அணுகுமுறை மிகவும் பயன் தரக்கூடியது என்றும் அக்கருத்தினை மகிழ்ச்சியுடன் வரவேற்பதாகவும் கூறினர். பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இவ்வாறான முறை பயன்தரும் என்பதும் அவர்களது கருத்தாகக் காணப்பட்டது.

நமது நாட்டில் தமிழ்மொழி மூலப் பாடசாலைகள், கல்வித் திணைக்களங்கள் என்பனவற்றில் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமயங்களைச் சேர்ந்தவர்கள் பணியாற்றுகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். இவர்கள் அனைவரும் ஏதோ ஒருவகையான இறைக் கோட்பாட்டைப் பின்பற்றுபவர்களாவர். இந்து ஒருவன் தான் வழிபடும் சிவனை மனிதனிடம் காணலாம். இவ்வடிப்படையில் மனிதனுக்குச் செய்யும் சேவையை சிவனுக்கு ஆற்றும் ஆராதனையாகக் கொள்ளலாம். அவ்வாறே இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களைப் பின்பற்றுபவர்களும் இறைவனுடன், மனிதர்களுக்குச் செய்யக்கூடிய சேவையை இணைத்துப் பார்க்கலாம்.

ஆகவே ஒவ்வொரு முகாமையாளரும் நிருவாகியும் தான் பின்பற்றும் மதக் கோட்பாட்டிற் கூறப்படும் கருத்துக்களின் அடிப்படையில் தனது முகாமைத்துவ நிருவாகச் செயற்பாடுகளை மேற்கொள்ள, பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நுட்பமுறைகளை விருத்தியாக்கிக் கொள்ளலாம். இக்கட்டுரையின் நோக்கம் முகாமைத்துவத்தில் ஆத்மீக அணுகுமுறையைப் பிரயோகிப்பது தொடர்பான ஒரு கருத்தை அறிமுகப்படுத்தி விடுவதேயன்றி அதற்கான நுட்பங்களைக் கொடுப்பதன்று. காரணம் ஆத்மீகம் தொடர்பான நுட்பங்கள், செயல்முறைகள் என்பனவற்றை அதற்குத் தகுதிவாய்ந்த பெரியோர்களிடமிருந்து பெற வேண்டும் என்பது எமது சமயங்களிடையே காணப்படும் பொதுக் கருத்தாகும். ஆகவே அவற்றுக்கான நுட்பங்களையும் செயல்முறைகளையும் கையாள்வதை அவ்வச்சமயங்களைச் சேர்ந்தவர்கள் தமக்குப் பொருத்தமானவாறு தேர்ந்தெடுத்துக்கொள்வதே பொருத்தமானது.

கல்வி முகாமைத்துவத்தில் ஆத்மீக அணுகுமுறையைப் பின்பற்றும் கோட்பாடு என்னும் ஒன்றைத் தெரியாமலே அவ்வணுகுமுறை பல முகாமையாளர்களால் பின்பற்றப்பட்டு வரலாம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால் முகாமைத்துவ இலக்கியங்களில் அவற்றைப் புகுத்தி அவற்றை முகாமைத்துவப் பயிற்சி நெறிகளில் அறிமுகம் செய்வது கல்வி நிலையங்களிலும், காரியாலயங்களிலும் நல்ல விளைவுகளை ஏற்படுத்துவனவாக அமைவதுடன் அது தொடர்பான நுட்பங்களின் விருத்திக்கும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தர் செயல்முறை வேதாந்தக் கோட்பாட்டை எமக்களித்த மகான். சகல உயிர்களுள்ளும் இறைவன் உறைவதை உணர்ந்து பணியாற்றும் அடிப்படையை எமக்களித்தவர். அவரது கோட்பாட்டில் அத்துவைதமும் துவைதமும் ஒருங்கிணைகின்றன. இவ்வாறாக விவேகானந்த வேதாந்தத்தை பின்பற்றும் முகாமையாளர்களிடம் ஆற்றல்கள் பன்மடங்காகப் பெருகமுடியும். ஏனெனில் 'நான் அதுவாக இருக்கின்றேன்'' என்னும் உபநிடதக் கருத்து அவரது போதனையின் அடிப்படையாக இருப்பது மட்டுமன்றி "அவனே எல்லா ஜீவராசிகளிடமும் உள்ளுறைந்து இருக்கிறான்'' என்பதும் அவரது கருத்தாகும். இவையெல்லாம் உபநிடதங்களின் அடிப்படையைக் கொண்டிருக்கின்றன. இக்கருத்துக்கள் முகாமையாளருக்கும், அவருடன் பணியாற்றுபவருக்கும் பயனளிப்பனவாக உள்ளன.

ஒரு முகாமையாளன் கட்டிடங்கள், தளபாடங்கள், விஞ்ஞான உபகரணங்கள்போன்ற பௌதிகப் பொருட்களை கஷ்டங்களின்றி முகாமை செய்யக்கூடும். ஆனால் அவனது வெற்றி மனித வளத்தினை அதாவது நிறுவனத்திலுள்ள ஆளணியினரை முகாமைத்துவம் செய்வதிலேயே தங்கியுள்ளது. அது அவ்வளவு இலகுவானதன்று. ஆனால் கடினமானதுமன்று. தனக்கு இணங்கிய முறையில் ஆத்மீகக் கருத்துக்களைச் செயற்பாட்டில் பிரயோகிக்கும் முகாமையாளன் தனது ஆற்றலை மேம்படுத்தித் தனது ஆளணியினரது ஆற்றலையும் மேம்படுத்தும் வகையில் அவர்களுக்குச் சிந்தனையை வழங்கமுடியும். இது பணியாற்றும் நிறுவனத்துக்கு நன்மையைக் கொண்டு வருவதுடன் அந்நிறுவனத்தால் பயன்பெறும் சமூகத்திற்கும் பயனை அதிக அளவில் கொண்டுவரும். ஏனெனில் அவன் தனது பணியை இறைவனது தொண்டாகச் செய்கின்றான்.

ஸ்ரீமத்சுவாமி விவேகானந்தரின் சிகாகோப் பேருரை நிகழ்ந்து நூறாண்டுகள் பூர்த்தியடையும் இச்சந்தர்ப்பத்தில் வெளியாகும் இம்மலரின் மூலம் கல்வி முகாமைத்துவத்தில் ஆத்மீக அணுகுமுறையைப் பிரயோகிக்கும் ஒரு சிந்தனை தொடர்பாகக் கண்திறக்கும் வாக்கியம் ஒன்றை மட்டுமே இச்சிறு கட்டுரை கொண்டுள்ளது. ஆழமான எந்த விளக்கமும் தரப்படவில்லை. ஆனால் கல்வித்துறையில் பணியாற்றும் பல்வேறு சமயங்களையும் சேர்ந்தோருக்கு அணுகுமுறையை பிரயோகிப்பதில் ஓர் அழுத்தம் கொடுப்பதே தற்பொழுது இக்கட்டுரையின் நோக்கம். கல்விப்புலத்தில் பணியாற்றுகின்றவர்கள் இவ்வணுகுமுறையைப் பிரயோகிக்க முயற்சி செய்வதுடன் இவ்வம்சம் தொடர்பாக மேலும் கருத்துக்கள் வளர முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும் என்பதே இக்கட்டுரை ஆசிரியரது கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயம் நடாத்திய சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சர்வமத மகாசபைப் பிரசங்க நூற்றாண்டு விழாவின்போது கவிஞர் கரவைக்கிழார் அவர்களால் அனுப்பிய இறை வணக்கப் பா**

## ஓய்ந்திடாதுழைத்தே என்றும் ஒளியதாய் வழியைக் காட்டி......

ராமகிருஷ்ணாலயம்,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, வடக்கு, யாழ்ப்பாணம்

1. ஆயிரம் ஆண்டுக் காலம் அல்லலுற் றவதிப் பட்டே
தேய்பிறை போலக் குன்றி தேஜசை இழந்தே நின்ற
தாயதாம் நாட்டை எண்ணி தணலதாய் நெஞ்சம் வேக
சேயதாய்ப் பிறந்த யோகி சீலத்தில் சிறந்த வீரன்.

2. நோயதை நாடிநோயின் முதலதை நாடி நாட்டில்
நேயத்தால் மக்கள் தம்மை நேரிலே சென்றணைத்தே
ஈந்தனன் அன்பின் ஊற்றை இன்னுயிர் தழைத்தே ஓங்க
ஓய்ந்திடா துழைத்தே என்றும் ஒளியதாய் வழியைக் காட்டி

3. சற்குரு ராம கிருஷ்ணர் தயையருள் துணையாய் நிற்க
பற்பல தேசத்தாரும் பார்த்துமே வியக்கும் வண்ணம்
கற்றபல் அறிஞர் கூடி சிகாகோ நகரில் அமைத்த
சிற்சபை மதமா நாட்டில் சிங்கமாய் கர்ச்சித் தங்கே

4. ''அமெரிக்க நாட்டில் வாழும் சகோதரி சகோதரரே''
விமோசனம் வேண்டும் எங்கும் பிரிவினை பேதம் மாள
நாமத்தால் வேறுபட்டாலும் நமையாளும் இறைவன் ஒன்றே
நாம் வாழும் உலகில் இன்று வாழ்ந்திடும் மார்கம் யாவும்

5. எமையெல்லாம் இட்டுச் செல்லல் இறைவனாம் ஒருவன் இடமே
அமைதியும் அன்பும் நல்ல அறச்செயல் எங்கும் ஓங்க
இமைப் பொழுதேனும் தானும் இறைவனை மறக்கா தென்றும்
விமலமாய் எண்ணம் எல்லாம் விளங்கிட வணக்கம் செய்வோம்

6. வேதாந்த அத்வை தத்தை விவேகத்தால் எடுத்து ரைத்தே
போதனை செய்தே மக்கள் புரிந்திட ஒளியு மீழ்ந்தார்
சாதனை செய்தே தொண்டர் தியானத்தில் ஆழ்ந்து நிற்க
ஓதினார் கீதை மற்றும் உபநிஷத் சுலோகம் தன்னை

7. மூன்றாண்டு அமெரிக் காவில் ஐரோப்பாவில் இருந்த போது
தேன்சுவை ததும்ப அன்னார் எழில்திகழ் ஆங்கி லத்தில்
ஊனுயிர் உருகும் வண்ணம் உபதேசம் செய்தே நாளும்
ஆன்மிகம் தழைத்தே ஓங்க அடிப்படை அமைத்துத் தந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. தாய்நாட்டில் குருவின் பேரில் மடமதை அமைத்தே ஈந்தார்
நோய்பரவி மக்கள் மிக்க வேதனைப் பட்ட போது
வாயுவேகம் தன்னில் ஓடி சீடரும் அவரும் சேர்ந்தே
ஓய்வின்றி நாளும் நல்ல தொண்டாற்றி உயிரைக் காத்தார்

9. தூய்மை மனத்தில் துலங்கிடவே தொல்லை துயரைத் தாங்கிநிதம்
வாய்மை நேர்மை கடைப்பிடித்தே வாழ்ந்தார் துறவை பூண்டொழுகி
தாய்மை உணர்வு பொங்கியெழ தன்னலப் பேயை விரட்டியென்றும்
காய்தல் உவத்தல் இலாதாராய் கனிவுடன் உயிர்த்தொண் டாற்றினரே

10. "ஆழ்ந்த உறக்கம் விட்டெழுவீர் அன்னை விலங்கை ஒடித்திடவே
சூழ்ந்த பகைமை விரைந்தோட சூளுரைத் தின்றே செயல்புரிவீர்
வீழ்ந்தே வறுமைப் படுகுழியில் வேதனைப் படுவோர் துயர்துடைக்க
பாழும் அசுத்தம் அறியாமை பஸ்பமாய்ப் போகப் பணிபுரிவீர்"

11. இவ்வண்ணம் உணர்ச்சி ஊட்டி எவரையும் ஈர்க்கும் வண்ணம்
எவ்வண்ணம் வாழ வேண்டும் என்பதை வாழ்ந்து காட்டி
பவ்வியம் பணிவு தொண்டு பரமனை நினைக்கும் சிந்தை
திவ்வியம் ஓங்க என்றும் திகழ்ந்திடும் விவேகா னந்தர்

12. நூற்றாண்டு விழாவெடுக்கும் இராமகிருஷ் ணாலயத்தார்
ஆற்றுகின்ற பணிசிறக்க அம்பிகைபொன் னம்பலவன்
வீற்றிருந்து சபைதனிலே தோன்றாத் துணையாக
போற்றி அருள்பாலிக்க புவிவாழ்வோர் வணங்கிடுவோம்.

மக்களை ஒருவரோடொருவர் இணைத்து ஒரு பாலத்தை அமைத்திடு. அந்தப் பாலத்தின்மீது நடந்து சென்று கோடானுகோடி மக்கள் பிறவிக் கடலைத் தாண்டட்டும். நல்லனவற்றை நாடும் எல்லாப் பிரிவினரையும் ஒன்றுசேர். இந்த மக்கட்குலப்படையில் கொடி எது என்பது முக்கியமல்ல. அது பச்சையா, நீலமா, சிவப்பா என்றெல்லாம் பாராதே. எல்லா வண்ணங்களையும் ஒன்றாகக் குழைப்பதால் கிடைக்கும் வெண்மையான அன்பெனும் பரஞ்சோதிதான் உன் இலட்சியம்.

— ஸ்வாமி விவேகானந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Swami Vivekananda - The Eternal Reformer

**S. Ambalavaner** B. Sc. Hons (London)
Retired Principal.

The story of Swami Vivekananda, prior to his appearance at the Parliament of Religions in America in 1893, is a well-known one. His brilliance as a student both at school and at college. His extraordinary apostolic tutelage under Sri Ramakrishna and after his Guru's demise, his establishing a monastery in a dilapidated house in Baranagore, his exploration of India on foot as the wandering phase of his and eventually, his illumination on the lonely rock amidst the rough seas off Kanyakumari in the southern tip of his great motherland.

When Swami Vivekananda stood on the platform of the Hall of Columbus in Chicago on the 11th of September 1893, he was not unaware of the fact that he was facing 8000 representatives of the cream of the intelligentsia of the civilized world. He knew that his hour of destiny had come. The time for delivering the message of his Master was at hand. It was a moment of history.

As he rose from his seat, a divine light lit his handsome face. As he stood up, he looked transfigured in the translucent power that was conferred on him by his Guru. There was a brilliant sparkle in his eyes. The mighty audience before him was truly overwhelmed by the spritual phenomenon that was unfolding before their own eyes in which they were totally involved. They had not witnessed anything like this anywhere, anytime. They were dumb-founded. The testimony of the stilling silence of the soul had descended on them. The media could only say that it was pindrop.

There were more things to follow. The profound silence was broken by a deafening applause when they heard him address them as "Sisters and Brothers of America" The melifluous and majestic tone of his voice in pronouncing these five simple words reached their ears like the ringing of celestial bells. Like the opening bars of a grand symphony of a Mozart or Beethoven, the tonality, melody and cadence of his inspired voice and the weight of the grand truth which the words conveyed captured the imagination of the august assembly, they were carried to a region beyond space and time. The normal restraints of this select congregation of 8000 men and women with high attainments of culture and sophistication snapped. It was a direct encounter of a different kind with the reality of the oneness of the human race.

The response was equally famous. A big-bang of cyclonic applause followed by waves of cheerings, clappings and demonstrations of sheer joy which continued for well over several minutes. The Swami stood with folded arms watching how the gates of the conseravative citadel of organized religion were now laid open to receive the great message of his Master.

When the upsurge subsided, the Swamiji began his address which unlike the prepared speeches of the earlier speakers, was delivered extempore. It was quite brief but meaningful. He thanked the parliament for the cordial welcome and his main theme was the fundamental postulates of Hinduism which he emphasized were, the recognition of the innate divinity of the human soul, the concept that all religions were true, and the importance of the acceptance and tolerance of all living faiths and the fact that from time immemorial the Hindus not only accepted them but also provided protection to all faiths who came to their shores as a result of fanatical tyrranny. In support of his thesis, he recited the beautiful "River Hymn" from the Vedas and the hymn "They all lead to Me" from the Song of the Lord. This short speech too received an equally enthusiastic applause and acclaim from the enraptured audience.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

it is worthy to note that just a few hours before this spectacular performance, the Swami was found in crumpled clothes sitting by the roadside, thoroughly despondent, having lost all his papers given to him by Mrs. Hale who did all that was needed for him to become a delegate before the inauguration on the same day and herself accompanied him to the venue. It is this God-sent help, in the nick of time, that made the Swamiji to become the brightest star in the spritual firmament and strangely too by one of the Hales who were the greatest promoters of astronomical research in the United States.

The Parliament of Religions was only a part of the programme of the World Fair and Exposition held to celebrate the 400th anniversary of the discovery of America by Columbus. It was headed by the chief prelate of the Roman Catholic Church, Cardinal Gibbons. The Underlying purpose was to establish the suprenmacy of the Christian religions and to gain support for their evangelistic activities. But Swami Vivekananda suceeded in turning the tables on them and at the end of the scientific session, an organiser was reported to have said as he came out of the hall, "That man a heathen! and we send missionaries to his peoples, it would be more fitting, that they sould send missionaries to us."

Powerful thoughts are like high energy quanta with infinite time lives. They radiate throughout the universe and trigger gigantic movements to evolve higher and higher forms of civilisations.

The U. N. Charter of human rights and the rights of minorities and the various international organisations that have sprung up to uplift the living conditions of the masses on a global scale originate from the thoughts of Swami Vivekananda especially the doctrines of the oneness of mankind and the divine nature of the soul.

The evils of caste, creed and community are fast disappearing. Poverty alleviation on a national scale is given high priority by all enlightened governments. Religions with rigid dogmas have become flexible and more accomodative. The deadly virus of fanaticism is fast fading from the face of the earth. Swamiji was aware of the powerful and stirring effect of the Communist manifesto on the minds of the poor. But the knew that its structure on such feeble foundations would one day collapse. The study of comparative religions as a subject in all Universities is a direct off-shoot of Swamiji's Chicago lectures. It is heartening to note that the subject is getting into high school syllabuses as well.

He foresaw the dawnfall of the mighty but tyrannical empires of his time. None of them exist today. The freedom fighters of India have all said in one voice, that but for the spiritual inspiration of Swami Vivekananda, India and all other neighbouring countries, wouls not have won their political freedom. To Hindus, especially the generations of the 21st century he is the guide and reformer par excellence. What he has written, said and done are the most authoritative commentaries on the Hindu scriptures that would stand the test of time and perceptions of modern science.

The teaching of this divine genius and hero have inspired thousands of men and women throughout the world and have brought solace and happiness to millions. It is, indeed, a rare privilege to pay one's humble homage to his memory and to lay one's pranams at his holy feet.

*பிறரிடமுள்ள தீய தன்மையை உணராதொழிக. அது அறிவின்மையும் தளர்ச்சியும் ஆம்.*

சுவாமி விவேகானந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுக் கட்டுரை

# "சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள்"

செல்வி. சீ. குமாரத்தி
மட்/வந்தாறுமூலை மத். மகா வித்.
சித்தாண்டி.

" எழுந்திருங்கள் ! விழித்துக்கொள்ளுங்கள்
குறிக்கோள் நிறைவேறும் வரை
நிறுத்தாமல் பணியாற்றுங்கள். "

காலத்தால் அழியாத இந்த வாக்கியங்களை உலகிற்கு வழங்கிய ஆன்மீகப்பேரொளி, தத்துவஞானி, அவதாரபுருஷர் சுவாமி விவேகானந்தர் ஸ்ரீ இராமகிருஷ்ணர் தன்னிடம் ஒப்படைத்த பணிகளைச் சிரமேற்கொண்டு புண்ணிய பாரதத்தின், கலாசாரப் பெருமையை உலகிற்கு வழங்கி மனித சமுதாயத்தின் உயர்விற்கு வழிகோலிய ஆன்மீகப் பெரியார் சுவாமி விவேகானந்தராவார்.

காளி கட்டம் என்று அழைக்கப்பட்ட கல்கத்தா நகரில் விஸ்வநாத தத்தர் என்ற வழக்கறிஞருக்கும், புவனேஸ்வரி அம்மையாருக்கும் 1863ம் ஆண்டு 12ம் நாள் ஜனவரி மாதம் பிறந்தார். இவரது பெற்றோர் இவருக்கு சிவபெருமானுடைய பெயர்களில் ஒன்றான "வீரேஸ்வரன்" என்னும் நாமம் இட்டனர். செல்லமாக நரேன் என அழைத்தார்கள். இவரது தாயே இவருக்கு முதல் குரு. பாடசாலைக்குச் சென்று கல்விகற்கும் முன் தன் தாயிடமே இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாச புராணக் கதைகளைக் கற்றறிந்தார்.

சிறுவயது முதலே கட்டுக்கடங்கா ஞானமும், குருஷேத்திர கண்ணனிடம் இருந்த குறும்பும் அறிவும் குழந்தை நரேந்திரனிடம் இருந்தது. இவரது ஆறாவது வயதில் அட்சராப்பியாசம் ஆரம்பமானது. தன் ஊரில் உள்ள சிறிய பாடசாலையில் ஆரம்பக்கல்வி கற்றார். பள்ளிப் படிப்பைத் தொடர்ந்து கல்லூரியில் பிரவேசித்த நரேந்திரன் ஆங்கிலத்தோடு தாய்மொழியான வங்காளி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு அவற்றைக் கற்றுத் தேர்ந்தார்.

மேலும் இவருக்கு சிறுவயது முதலே கடவுளைக் காணவேண்டும் என்னும் அவா, கடவுளைக் காட்டும் குரு யாராவது கிடைக்கமாட்டார்களா என்று ஏங்கிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் தான் ஸ்ரீ இராமகிருஷ்ணரைச் சந்தித்து, அவரிடமே கடவுளைக் காணும் வழிகளைக் கற்றறிந்தார். குரு தேவரிடம் பெற்ற ஆசியினாலும், அருட்சக்தியினாலும், நரேந்திரன் "சுவாமி விவேகானந்தரானார்"

அதன்பின்னர் காவி உடை தரித்து பல போதனைகளையும், ஆன்மீக சிந்தனைக் கருத்துக்களையும், இந்தியாவில் மட்டுமன்றி அமெரிக்கா போன்ற வெளிநாடுகளிலும், ஏன் இலங்கையிலும் சென்று பிரசாரங்கள்மூலம் வெளிப்படுத்தினார். அவரது சிந்தனைக் கருத்துகளை நாம் நோக்குவோம்.

முதலாவதாக அவர் கல்வி பற்றிக் கூறிய கருத்துக்களை எடுத்து நோக்குமிடத்து நாம் மூளையிலே பல விஷயங்களைத் திணித்துக் கொண்டு நாள்தோறும் உருப்போடுவதால் என்ன பயன்? கல்விப் பயிற்சியை நன்றாக ஜீரணமாக்கி பயன்படுத்தவேண்டும். நாம் கற்கும் கல்வியானது உயிர் ஊட்டுவதாய், ஒழுக்கம் அளிப்பதாய், புத்தியை விசாலிக்கச் செய்வதாய் அமையவேண்டும் என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் "சந்தனக் கட்டை சுமக்கும் கழுதைக்கு அதன் பாரம்தான் தெரியுமே ஒழிய அதன் வாசனையை அது உணராது" என்று ஒரு பழமொழி உண்டு. விஷயங்களைச் சேகரிப்பதுதான் கல்வி என்றால் புத்தகசாலைகளன்றோ மகான்களாக இருக்கும்? அகராதிகளன்றோ மகரிஷிகள் ஆகிவிடும்? அதாவது நாம் ஆன்மீக ஞானம் லௌவீகக் கல்வி இரண்டையும் கையில் கொண்டு அவற்றை தேசிய முறையில் நிர்மாணம் செய்யவேண்டும் என கல்விப்பயிற்சி பற்றி சில சிந்தனைக் கருத்துக்களைக் கூறுகின்றார்.

அடுத்து சமயப்பிரிவுகள் பற்றிக் கூறுகின்ற கருத்துக்களை எடுத்து நோக்குவோம். நாடு முழுவதும் சமயப்பணிகள் நடக்கின்றன. புதுப் புது சமயப் பிரிவுகள் தோன்றாத நாடே இல்லை எனக் கூறலாம். "நீரின் வேகம் வலுப் பெற, வலுப்பெற அதன் சுழல்களும் அலைகளும் அதிகரிக்கின்றன." அதுபோலவே "சமயப் பிரிவுகளும் அதிகரிக்கின்றன. சமயப் பிரிவுகள் அழிவின் அடையாளம் அல்ல. வளர்ச்சியின் அடையாளமே. ஆகவே அப்பிரிவுகள் பெருகட்டும். ஒவ்வொரு மனிதனும் தான் ஒரு தனித்த சமயப்பிரிவு என்று உணரும் வரை சமயப் பிரிவுகள் தளைக்கட்டும் அதைப் பற்றி வாதிட எவரும் முன்வரவேண்டாம்" எனக் கூறுகின்றார்.

மேலும் சமயப் பிரசாரம் யாராவது செய்ய வந்தால் அவரிடம் கடவுளைக் கண்டிருக்கிறாயா? ஆன்மாவைப் பார்த்திருக்கிறாயா? என்று கேளுங்கள் இவ்வாறு எதனையும் அவர்கள் சொல்லாவிடின் தானே குருடனாய் இருந்துவிட்டு பிறருக்கு எப்படி வழி காட்டுவது எனக் கேளுங்கள். என்கின்றார்.

மேலும் அளவற்ற பொறுமை, அளவில்லாத் தூய்மை, முடிவிலா முயற்சி இவைதான் நல்ல காரியங்களைச் செய்யும் இரகசியங்களாகும். பொறாமையை ஒழியுங்கள், இகபர சுகானுபவங்களை விலக்குங்கள், ஆன்மாக்களை இறைவனின் திருப்பாதங்களில் சேர்ப்பதற்காக அனைவரும் தீக்குளியுங்கள் எனக் கூறுகின்றார். சத்தியமும், நன்மையும், அசத்தியத்தையும், தீமையையும் விட எவ்வளவோ சக்தி வாய்ந்தவை இவை ஒருவனிடம் இருந்தால் முன்னேற்றம் நிச்சயம் எனக் கூறுகின்றார்.

அடுத்து சுவாமி தன்நம்பிக்கை பற்றிக் கூறும்போது, நான் பலமற்றவன் சக்தியற்றவன் என்று ஒருவன் சொல்லிக்கொண்டிருப்பதால் எந்தவித நன்மையும் உண்டாகாது. ஒருவன் நான் சர்வ வல்லமை உடையவன் என்று சொல்லிக்கொண்டிருப்பானானால் அவன் அவ்விதமே ஆவான். இந்த உண்மையை யாவரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என தன்நம்பிக்கை பற்றிக் கூறுகின்றார்.

மேலும் நாம் நமது குறுகிய எண்ணத்தால் உருவாக்கிக்கொண்டிருக்கும் உலகத்தைத் துறந்துவிட வேண்டும். ஏனென்றால் குறைந்த அனுபவம், ஆளமற்ற அறிவு, பலவீனம் இவற்றின் அடிப்படையில் தோன்றியதே இந்த உலகம். ஆகவே இதைத் துறந்து விடுங்கள். நாம் இதுவரை உடும்புப் பிடியாக பிடித்துக்கொண்டிருந்த உலகம் நமது கற்பனையில் தோன்றிய பொய்யான உலகமே! நன்றாக கண்ணைத் திறந்து பாருங்கள் இந்த உலகம் எப்போதும் இருப்பதில்லை இது ஒரு கனவு, மாயை,

அடுத்து பொறாமை பற்றி சுவாமி கூறுகின்ற கருத்துக்களை எடுத்து நோக்குமிடத்து பொறாமையை விலக்குங்கள் மேலும் செய்ய வேண்டிய வேலைகளை எல்லாம் செய்யும் ஆற்றல் பெறுவீர்கள். அடிமைகள் யாவருக்கும் பெரிய சனியனாய் இருப்பது பொறாமையே யாகும். நமது நாட்டைப் பிடித்த சனியனும் அதுதான். ஆகவே பொறாமையை ஒழியுங்கள் என பொறாமை பற்றிக் கூறுகின்றார்.

மேலும் ஆழ்ந்த மன அமைதியைக் குலையாது போற்றுங்கள் பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை இவற்றிற்கு வசப்படாதீர்கள். பலமே வாழ்வு பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்மையே மரணம் எனவும் கூறுகின்றார். உண்மை எங்கே இழுத்துச் சென்றாலும் அதனைப் பின்பற்றிச்செல் கோளையாகவும், வேடதாரியாகவும் மாறிவிடாதே! என்கிறார்.

மேலும் சுவாமி சாதிப் பிரச்சனை பற்றிக் கூறும்போது நாம் சாதிச் சண்டை போடுவதால் என்ன பயன், அது எம்மை இன்னும் அதிகமாகப் பிரிக்கும், இன்னும் அதிகமாகத் தாழ்த்தும், ஆகவே சாதிச் சண்டை போடாதீர்கள். சாதிப் பிரச்சனையை தீர்ப்பதற்கு வழி, மேலுள்ளவர்களை கீழ் இழுப்பதன்று, கீழுள்ளவர்களை மேலுள்ளவர்களின் நிலைக்கு உயர்த்துவதே சாதிப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஒரே வழி என்கிறார். அதாவது பிராமணர் மேற்படியிலும், சூத்திரர் கீழ்ப்படியிலும் வைத்து போற்றப்படுகின்றார்கள். சூத்திரரை பிராமணரது நிலைக்கு உயர்த்துவதே எமது கடமையாகும் எனக் கூறுகின்றார்.

அடுத்து நாம் ஒவ்வொருவரும் தொண்டு செய்யவேண்டும் என்பதற்கு சில கருத்துக்களைக் கூறுகின்றார். யாருடைய நெஞ்சு ஏழைக்காகத் துயரத்தில் அழுமோ அவனையே நான் மகாத்மா என்பேன் எனக் கூறுகின்றார். நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து பிறருக்காக உழைக்க வேண்டும் என்கிறார்.

ஆகவே இவரது சிந்தனைக் கருத்தானது வெளிப்படையாகவும், அடிப்படையாகவும் பல மாந்தர்பால் புகுந்து புத்துயிரும் புனிதமும் பெற்று வருகின்றது. அண்ணலது ஆண்மையை, ஆன்மீகத்தை அறிந்திட வல்லவர்கள் மிகுந்திடுவார்களாக. வையமும் துயர் தீர்ந்து உய்திடுவதாக.

மேற்கூறப்பட்ட சகல விடயங்களையும் தொகுத்து நோக்குமிடத்து சுவாமி விவேகானந்தர் மக்கள்முன் வைத்த சிந்தனைக் கருத்துகளில் சிலவற்றை நாம் அறிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது.

கடவுளைத் தேட நீங்கள் எங்கே செல்கிறீர்கள்? ஏழைகள், துன்பப் படுபவர்கள், பலவீனர்களெல்லோரும் கடவுளர் அல்லரா? அவர்களை ஏன் நீங்கள் ஆராதிக்கக்கூடாது? கங்கைக் கரையில் கிணறு தோண்டுவதேன்.

சமயமே வாழ்வின் மூலவேர் என்பதை நம்புங்கள். அது சரியாயிருந்தால் எல்லாம் சரியாயிருக்கும்.

நமது துன்பங்களையெல்லாம் என்றைக்கும் அழித்துவிட வல்லது ஆத்ம ஞானம் ஒன்றேயாம்.

முன்னேற்றம் வேண்டின் நாம் முதலில் நம்மிடத்தும் பின் தெய்வத்தினிடத்தும் நம்பிக்கை வைத்தல் வேண்டும்.

— ஸ்வாமி விவேகானந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீனவர்க்கு ஓர் சமூக மண்டபம்



வாசிகசாலையும் சனசமூக நிலையமும்



வாசிகசாலையில் ஓர் வாசகர் கூட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது நிகழ்ச்சிகள்



ஸ்ரீமத் சுவாமி
ஆத்மஸ்தானந்தஜீ மஹராஜ்
மங்கல விளக்கேற்றி
ஆரம்பிக்கின்றார்.

(பொதுக் காரியதரிசி
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், கல்கத்தா)



ஓர் சர்வ மத மகாசபை



மாணவரின்
"கிணற்றுத்தவளை"
நாடகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு விழா கட்டுரை, பேச்சுப்போட்டி முடிவுகள்

## கட்டுரைப் போட்டி முடிவுகள்:

### கீழ்ப்பிரிவு:

1. செல்வி. ச. சோபனா, மட் / மண்டூர் இ. கி. மி. வித்தியாலயம்
2. செல்வி. இ. தவலோஜினி, மட் / தன்னாமுனை புனித வளனார் வித்தியாலயம்
3. செல்வி. எம். எம். முர்ஷிதா, மட் / மெத்தைப்பள்ளி வித்தியாலயம், காத்தான்குடி.

### மத்திய பிரிவு:

1. செல்வி. க. சுகந்தினி, மட் / செட்டிபாளையம் ம. வித்தியாலயம்.
2. செல்வி. ஏ. எஸ். பி. சகிலா, மட் / காத்தான்குடி ம. ம. வித்தியாலயம்.
3. செல்வி. அ. மு. மு. முர்சிலா, மட் / பாலமுனை அலிகார் வித்தியாலயம், ஆரையம்பதி.

### மேற்பிரிவு:

1. செல்வி. சீ. குமாரத்தி, மட் / வந்தாறுமூலை ம. ம. வித்தியாலயம்.
2. செல்வன். வி. மலர்வண்ணன், மட் / முனைத்தீவு சக்தி வித்தியாலயம்.
3. செல்வன். நா. சத்தியசீலன், மட் / செட்டிபாளையம் ம. வித்தியாலயம்.

## பேச்சுப்போட்டி முடிவுகள்:

### கீழ்ப்பிரிவு:

1. செல்வன். மோ. மனோபிரசாத், மட் / ஆரைப்பற்றை இ. கி. மி. வித்தியாலயம்.
2. செல்வன். க. நிரஞ்சன், மட் / தன்னாமுனை புனித வளனார் வித்தியாலயம்.
3. செல்வி. ஏ. எம். பௌசியா, மட் / மெத்தைப்பள்ளி ம. வித்தியாலயம்.

### மத்திய பிரிவு:

1. செல்வி. ந. லோஜினி, மட் / கிரான் ம. வித்தியாலயம்.
2. செல்வி. இ. மலர்விழி, மட் / வந்தாறுமூலை ஸ்ரீ மகா விஷ்ணு வித்தியாலயம்.
3. செல்வன். பொ. உமாச்சந்திரன், மட் / சிவானந்தா வித்தியாலயம்.

### மேற்பிரிவு:

1. செல்வி. சி. டிலக்ஷி, மட் / ஆனைப்பந்தி இ. கி. மி. பெ. வித்தியாலயம்.
2. செல்வி. ஞா. யோகேஸ்வரி, மட் / தன்னாமுனை புனித வளனார் வித்தியாலயம்.
3. செல்வி. எம். ஐ. எம். முஜீப், மட் / காத்தான்குடி ம. ம. வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A bright pearl of the Orient sea

Brother Swami Vivekananda,
Bright pearl of the Orient sea,
Came here with his soul all illumined
By Light, Love, and Liberty

He came here with greetings fraternal
From the mystical East to our West;
And From those wise Vedas inspired
He taught us the purest and best.

He brought us a message most gracious
From the long past ages of time;
He came as the Priest and the Prophet,
Enthused with a faith all sublime.

Right soon to our hearts he found entrance,
So loveable, so gentle was he,-
And as teacher or friend was so winning,
None could other than love be.

He proclaimed ancient truths with wisdom,
And his eloquence quickly did win
Many earnest and faithful disciples,
Whom he taught of their God-powers within.

God bless our dear brother Swami,
May his path grow ever more bright;
And when his earthly journey is finished
He be clothed in God's garments of light.

*Dr. John C. Wymon,*
Brooklyn, New York.
23rd June, 1899.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EXCERPTS FROM SWAMIJI'S ADDRESSES

*'..The question has yet to be decided whether peace will survive or war, whether patience will survive or non-forbearance, whether goodness will survive or wickedness, whether muscle will survive or brain...'*

*'Sectarianism, bigotry, and its horrible descendant, fanaticism, have long possessed this beautiful earth... But their time is come; and I fervently hope that the bell that tolled this morning in honour of this convention may be the death-knell of all fanaticism, of all persecutions with the sword or with the pen...'*

— O —

*The whole world of religions is only a travelling, a coming up, of different men and women, through various conditions and circumstances, to the same goal. Every religion is only evolving a God out of the material man, and the same God is the inspirer of all of them. Why, then, are there so many contradictions? They are only apparent... The contradictions come from the same truth adapting itself to the varying circumstances of different natures ..'*

— O —

*'If there is ever to be a universal religion, it must be one which will have no location in place or time; which will be infinite like the God it will preach, and whose sun will shine upon the followers of Krishna and of Christ, on saints and sinners alike; which will not be Brahminic or Buddhistic, Christian or Mohammedan, but the sum total of all these, and still have infinite space for development.'*

— O —

*'Do I wish that the Christian would become Hindu? God forbid. Do I wish that the Hindu or Buddhist would become Christian? God forbid... The Christian is not to become a Hindu or a Buddhist, nor a Hindu or a Buddhist to become a Christian. But each must assimilate the spirit of the others and yet preserve his individuality and grow according to his own law of growth ..'*

— O —

*'if the Parliament of Religions has shown anything to the world it is this: It has proved to the world that holiness, purity and charity are not the exclusive possessions of any church in the world, and that every system has produced men and women of the most exalted character. In the face of this evidence, if anybody dreams of the exclusive survival of his own religion and the destruction of the others, I pity him from the bottom of my heart, and point out to him that upon the banner of every religion will soon be written, in spite of resistance: "Help ant not Fight" "Assimilation and not Destruction," "Harmony and Peace and not Dissension."*

— O —

*'I shall go to the mosque of the Mohammedan; I shall enter the Christian's church and kneel before the crucifix; I shall enter the Buddhist Temple, where I shall take refuge in Buddha and his law. I shall go into the forest and sit down in meditation with the Hindu, who is trying to see the light which enlightens the heart of every one,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Not only shall I do all these, but I shall keep my heart open for all that may come in the future. Is God's book finished? Or is it still a continuous revelation going on? It is a marvellous book—these spiritual revelations of the world. The Bible, the Vedas, the Koran, and all other sacred books are but so many pages, and an infinite number of pages remain yet to be unfolded. I would leave it open for all of them. We stand in the present, but open ourselves to the infinite future. We take in all that has been in the past, enjoy the light of the present, and open every window of the heart for all that will come in the future. Salutation to all the prophets of the past, to all the great ones of the present, and to all that are to come in the future!'*

*We want to lead mankind to the place where there is neither the Vedas, nor the Bible, nor the Koran; yet this has to be done by harmonising the Vedas, the Bible, and the Koran.*

*Mankind ought to be taught that religions are but the varied expressions of THE RELIGION, which is Oneness, so that each may choose the path that suits him best.*

**Swami Vivekananda**

மதம்பற்றி என்றும் போரிடாதே, மதம்பற்றிய சண்டைகளும் வாதங்களும் அறிவின்மையையே புலப்படுத்துகின்றன.

— ☆ — — ☆ — — ☆ —

சமயம் என்பது நூல்களிலோ, மதக்கோட்பாடுகளிலோ பண்டிதர்களின் வாதங்களிலோ இல்லை. அது அனுபவித்து உணரப்படுவது.

— ஸ்வாமி விவேகானந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மசாரி புண்ணிய சைதன்யா

# சுவாமிஜி சொற்பொழிவின் சிறப்பியல்பு !

சுவாமி விவேகானந்தர் தாம் பெற்ற ஆன்மிக அனுபவங்களின் அடிப்படையில், உயர்ந்த ஆன்மிக நிலையிலிருந்து சொற்பொழிவுகள் நிகழ்த்துவது வழக்கம்.

எனவேதான் அவரது சொற்பொழிவுகளில் ஓர் ஆன்மிக ஆற்றல் பொதிந்திருக்கிறது.

1899-ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஒரு நாள் லெக்கெட் அம்மையார் தமது தோழியோடு சுவாமிஜியின் சொற்பொழிவைக் கேட்கச் சென்றார்.

சுவாமிஜி சொற்பொழிவு நிகழ்த்தினார்.

அதைக் கேட்டவர்களின் மனங்களும் உயர்ந்த ஆன்மிக தளத்திற்கு உயர்த்தப்பட்டது. எனவே அவர்கள் சொற்பொழிவுமுடிந்து வீட்டுக்குப் புறப்படும்போது, தங்கள் நாட்டு வழக்கப்படி ஒருவருக்கு ஒருவர் 'குட்-பை' சொல்லக்கூட மறந்துவிட்டார்கள்.

அதற்குக் காரணம், பேசுவதன் மூலம் சுவாமிஜி ஏற்படுத்திய ஆன்மிக சூழ்நிலையை இழந்துவிட அவர்கள் விரும்பாததுதான்.

அன்றிரவு லெக்கெட் அம்மையார் தமது தோழியைக் காணச் சென்றார்.

தோழி தன் அறையில் குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தாள்.

அதற்கான காரணத்தை லெக்கெட் அம்மையார் விசாரித்தபோது தோழி, ''சுவாமிஜி எனக்கு நித்தியமான, அழியாப் பேரின்ப வாழ்க்கையைக் காட்டியிருக்கிறார்...'' என்று கூறினாள்.

சுவாமி அபேதானந்தர் தமது மலரும் நினைவுகளில் சுவாமிஜியின் சொற்பொழிவைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: ''ஒரு சமயம் சுவாமிஜியின் சொற்பொழிவை நான் கேட்டுக்கொண்டிருந்தேன். அப்போது ஆழ்ந்த தியானத்தில் நிகழ்வதுபோல் என்னுடைய குண்டலினி சக்தி தூண்டப்பட்டது.''

மற்றொரு சமயம், சுவாமிஜி அமெரிக்காவில் பகவத்கீதை பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினார்.

அதைப்பற்றி மேக்லவுட் அம்மையார், ''சுவாமிஜியின் சொற்பொழிவைக் கேட்கும் போது உடல், காலம், இடம் போன்ற எல்லைகளுக்கு அப்பால் நாம் அழைத்துச்செல்லப் படுவதை உணரமுடியும்'' என்று கூறியுள்ளார்.

ஒருநாள் காலை பத்து மணியிலிருந்து மாலை நான்கு மணி வரையில் சுவாமிஜி தொடர்ந்து ஆன்மிகம் குறித்துப்பேசிக்கொண்டிருந்தார்.

அதைப்பற்றி மீட்ஸ் சகோதரிகள், 'சுவாமிஜி பேசிக்கொண்டிருக்கும்போது அந்த இடத்தில் ஆன்மிக அலை பரவியிருந்தது. எங்கள் மத்தியில் இயேசு கிறிஸ்துவே நின்று பேசுவதுபோல் எங்களுக்குத் தோன்றியது'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சகோதரி நிவேதிதை, சகோதரி கிறிஸ்டைன் ஆகிய இருவரும் வெளிநாட்டினர். எனினும், இந்திய மக்களின் நன்மைக்காக அவர்கள் அயராமல் தொண்டாற்றினார்கள். அதற்கு என்ன காரணம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரி கிறிஸ்டைன் கூறுகிறார்:

''சுவாமிஜி இந்தியாவைப் பற்றி பேசிய போது எப்போது அவர் திருவாயிலிருந்து 'இந்தியா' என்ற சொல் வந்ததோ, அப்போதே எங்களுக்கு இந்தியாவின்மீது அன்பு பிறந்தது.''

ஒருமுறை சுவாமிஜி தமது சொற்பொழிவைப் பற்றி தாமே இவ்விதம் கூறியுள்ளார்:-

''நான் வெறுமனே சொற்பொழிவு செய்வதாகவா நீங்கள் நினைக்கிறீர்கள்? சொற்பொழிவைக் கேட்பவர்களுக்கு நான் ஆன்மிக சக்தியை வழங்குகிறேன். அதை நான் தெளிவாக உணர்கிறேன். அவர்களும் தாங்கள் ஆன்மிக சக்தி பெறுவதை உணர்கிறார்கள்.''

## யார் அந்த மாமனிதர்?

அந்தப்பெண் ரஷ்யாவைச் சேர்ந்தவள். தன் இளமைக்காலம் முழுவதையும் ரஷ்யாவிலேயே கழித்தவள்.

அவள் சிறுவயதில் ஓர் அதிசய கனவு கண்டாள். அந்தக் கனவு இதுதான்:

எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. பரந்து விரிந்த கடலில் ஒரு கப்பல் மட்டும் தனியாகச் சென்றுகொண்டிருந்தது. அதில் அந்தப் பெண் இருக்கிறாள்.

கண்ணுக்கு எட்டியதூரம் வரையில் எல்லையற்றிருந்த கடலும், காரிருளும் அவளை நிலைகுலையச் செய்தன. அதனால் அவள் மிகவும் பயந்து நடுங்கினாள்.

என்ன செய்வது என்று தெரியாமல் அவள் திகைத்துக்கொண்டிருந்தபோது, அங்கே ஒருவர் வந்தார். அவருடைய முகத்தில் தெய்விக ஒளி வீசியது.

அவர் அவளிடம், ''பயப்படாதே, இருட்டாக இருந்தாலும் இந்தக் கப்பல் எங்கே போய்ச் சேரவேண்டுமோ, அங்கே சரியாகப் போய்ச் சேர்ந்துவிடும்'' என்றார்.

அதைக் கேட்டதும் அவளுக்கிருந்த பயம் நீங்கியது, தைரியம் பெற்றாள்.

இந்தக் கனவு முடிந்ததும் அவள் தூக்கம் கலைந்து விழித்துக்கொண்டாள்.

கனவில் தனக்கு தைரியம் சொன்ன மகானின் முகம் அவளுக்கு நன்றாக நினைவில் இருந்தது.

ஒரு விநாடியில் தன்னுடைய பயத்தை நீக்கிய அந்த மாமனிதர் யார் என்று பிறகு அவள் பல இடங்களில் தேடினாள்.

ரஷ்யாவிலும் இங்கிலாந்திலும் அவரை அவள் பல வருடங்கள் தேடினாள். ஆனால் பயனில்லை.

இருந்தாலும் அவள் தன் முயற்சியைக் கைவிட்டுவிடவில்லை. தொடர்ந்து அவரைத் தேடிக்கொண்டிருந்தாள்.

இந்த நிலையில் 1895-ஆம் ஆண்டு அவள் இங்கிலாந்துக்குச் செல்ல நேர்ந்தது.

அங்கே ஓர் இடத்தில் சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த ரஷ்யப் பெண்ணும் சொற்பொழிவைக் கேட்கச் சென்றாள்.

சுவாமிஜி அங்கு பேசுவதற்காக வந்தார்.

ஓ, என்ன ஆச்சரியம்! அந்தப் பெண் வியப்பில் மூழ்கினாள். பேசுவதற்கு அவளுக்கு நா எழவில்லை.

யாரை அவள் பல ஆண்டுகளாகத் தேடிக்கொண்டிருந்தாளோ, அவரேதான் இப்போது 'பயமின்மை' என்ற வேதாந்தக் கருத்தை லண்டன் மாநகரத்தில் பிரசாரம் செய்துகொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Homage to Swami Vivekananda

## 'Love for my country became a thousand-fold'

I have come here to pay my homage and respect to the revered memory of Swami Vivekananda, whose birthday is being celebrated today (January 1923). I have gone through his works very thoroughly and after having gone through them, the love that I had for my country became a thousand-fold. I ask you, young men not to go away empty-handed without imbibing something of the spirit of the place where Swami Vivekananda lived and died.

MAHATMA GANTHI.

## 'A soul of puissance'

The going forth of Vivekananda, marked by the Master as the heroic soul destined to take the world between his two hands and change it, was the first visible sign to the world that India was awake not only to survive but to conquer.

Vivekananda was a soul of puissance, if there was one, a lion among men. We perceive his influence still working gigantically, we know not well how, we know not where, in something that is not yet formed, something lionine, grand, intuitive, upheaving that has entered the soul of India, and we say, 'Behold! Vivekananda still lives in the soul of his motherland, and in the souls of her children'.

SRI AUROBINDO.

## 'A call of awakening'

Vivekananda has said that there is the power of Brahman in every human being; also that it is through the poor and the dispossessed that Narayana seeks and awaits our service. What a grand message ! It lights up for man's consciousness the path to limitless liberation from the trammels and limitations of his self. This is not an ethical injunction laying down any specific rule of conduct, no narrow commandment for the regulation of our behaviour. Opposition to untouchability is inherent in the Message-opposition not on any ground of political expediency, but because the Message is incompatible with insult to the humanity of Man, for untouchability is a self-inflicted insult to every one of us.

And because the Message of Vivekananda is a call of awakening to the totality of our Manhood, that it has set so many of our youths on diverse paths to freedom through Work and through Renunciation and Service.

RABINDRANATH TAGORE.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'Raised India spiritually'

Swami Vivekananda is one of those leading personages who contributed greatly to the awakening of modern India, while most of his contemporaries made their contribution through political or purely socio-religious work, Swami Vivekananda had the distinction of raising India spiritually in the eyes of the West. His interpretation of Vedanta to which he gave expression during his tour of the United States of America brought home to Western countries the richness of India's cultural heritage. On this occasion we must pay our humble tribute to the memory of that great Indian.

RAJENDRA PRASAD.

## 'He was the first'

It was impossible to imagine Vivekananda in the second place. Wherever he went he was the firrt. His pre-eminent characteristic-was kingliness. He was a born king and nobody ever came near him either in India or America without paying homage to his majesty. It was in vain that Vivekananda refused to accept such homage, judging himself severely and humiliating himself-everybody recognised in him at sight the leader, the anointed of God, the man marked with the stamp of the power to command. A traveller who crossed his path in the Himalayas without knowing who he was, stopped in amazement, and cried 'Shiva '...It was as if his chosen God had imprinted His name upon his forehead.

He was less than forty years of age when he lay stretched upon the pyre. But the flame of that pyre is still alight today. From his ashes, like those of the Phoenix of old, has sprung anew the conscience of India-the magic bird-faith in her unity and in the Great Message, brooded over from Vedic Times by the drawing spirit of his ancient race-the message for which it must render account to the rest of mankind.

ROMAIN ROLLAND.

## 'Reckless in his sacrifice...'

I cannot write about Vivekananda without going into raptures. Few indeed could comprehend or fathom him-even among those who had the privilege of becoming intimate with him. His personality was rich, profound and complex and it was this personality - as distinct from his teachings and writings - which accounts for the wonderful influence he has exerted on his countrymen. Reckless in his sacrifice, unceasing in his activity, boundless in his love, profound and versatile in his wisdom, exuberant in his emotions, merciless in his attacks but yet as simple as a child - he was a rare personality in this world of ours ......

SUBHAS CHANDRA BOSE.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## '...the Swami is an honour to humanity...'

I have just been reading some of Vivekananda's address in England. The man is simply a wonder for oratorical power... the Swami is an honour to humanity in any case .. The paragon of all monistic systems is the Vedanta philosophy of Hindustan, and the paragon of Vedantist missionaries was the late Swami Vivekananda who visited our land some years ago. The method of Vedantism is the mystical method. You do not reason, but after going through a certain discipline *you see*, and having seen you can report the truth. Vivekananda thus reports truth in his lectures ..

WILLIAM JAMES.

## 'Younger generation... would learn much from his speeches and writings ..'

I do not know how many of the younger generation read the speeches and the writings of Swami Vivekananda. But I can tell you that many of my generation were very powerfully influenced by him and I think it would do a great deal of good to the present generation if they also went through Swami Vivekananda's writings and speeches, and they would learn much from them.

PANDIT JAWAHARLAL NEHRU.

## May his faith, his courage and his wisdom ever inspire us ...

Swami Vivekananda saved Hinduism and saved India. But for him we would have lost our religion and would not have gained our freedom. We therefore owe everything to Swami Vivekananda. May his faith, his courage and his wisdom ever inspire us so that we may keep safe the treasure we have received from him.

C. RAJAGOPALACHARI.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆதவன் அச்சகம், அரசடி, மட்டக்களப்பு.
தொலைபேசி : 065 - 2076

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org